விலை 20/=
ISSN-2613-828X

# யாழ் களரி

www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 02 | தை - மாசி | களரி: 01




## கல்வி தான் எங்களின் சொத்து



சர்வ மத தலைவர்களால்

## சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியும்



## வீட்டுத்தோட்டம் செய்வோம்

நீ உருவாகி பிறரை உருவாக்கு

# யார் உங்கள் பிரதிநிதிகள்?

இனிவரும் காலத்திலும் இவர்கள் தான் எம்மை வழிகாட்டப் போகிறார்கள்? மிளகாய்த்தூள் பைக்கற், வாள், கத்திகளுடன் நாடாளுமன்றம் செல்வோரும், கட்சி மாற லஞ்சம் கொடுப்போரும், வாங்குவோரும், சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்து கோமாளிகளாக நடந்தவர்களும், அவரது கதிரையை உடைத்து எறிய முற்பட்டவர்களும், பைபிளையும், அரச கோப்புகளையும், குப்பைக் கூடைகளையும், தொலைத்தொடர்பு மைக்கையும் அறுத்தெறிந்தவர்களும் தூர நின்று வேடிக்கை பார்த்தவர்களும், தூசித்த அசிங்க வார்த்தை பேசியவர்களும் தானா எமது வாழ்வின் எதிர் காலத்திற்கு திட்டமிடுபவர்கள்? இவர்கள் தானா எமது முன் மாதிரியான தலைவர்கள் என முகம் காட்டுபவர்கள் சமய ஸ்தலங்கள் சென்று ஆசிபெறுபவர்கள் இவர்களா? ஆசி கொடுப்பவர்கள் சிபார்சு செய்யும் சமயத் தலைவர்கள் என்ன புத்திமதி கூறி ஆசிக்கிறார்கள்? இவர்களுக்கு சமயத்தலங்கள் கொடுக்கும் முன்னேற்றமாக முக்கியத்துவம் ஏன்? ஏன் மக்களே சிந்தியுங்கள். சட்டத்தில் இறுக்கமிருந்தால் இவர்கள் வேட்பாளராகக் கூட அனுமதிக்க முடியுமா? குற்றவாளிகளுக்கு தண்டனை தேர்தலில் தடையிடமுடியாதா?

# சும்மா, சும்மா...

நல்லாட்சி அரசை அமைத்து ஜனாதிபதி அதிகார ஆட்சிக்கு முடிவு கட்டி மீண்டும் பதவிக்காகப் போட்டி போடமாட்டேன். ஊழலுள்ளவர்களை வெளிப்படுத்தி அறவீடுகள் செய்து நல்லாட்சியில் சகல மக்களும் சமமாக மதித்து உரிமைகள் பகிரப்படுதலே எனது இலக்காகும் என உரத்துக் கூறியவர் ஜனாதிபதியாக மீண்டும் போட்டியிட்டு மக்களின் முன் தனித்து நின்று வெல்வேன், என்னைக் கொன்று விடுவார்கள் என்பவர்களுடன் கூட்டு செல்ல முன் வந்தேன். அவர்கள் என்னைக் கொல்வதாகச் சொன்னது எல்லாம் சுமா தான், அப்படியானால் பல வாக்குறுதிகள், கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான விடை காண்பது, சிறையில் உள்ள சுதாகரனின் மகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் போன்றவைகள் எல்லாம் சும்மா சொன்னவைகள் தானே?

## ஏமாற்றப்படும் பட்டதாரிகள்

வேலை வாய்ப்புத் தரப்படும் என வாக்குறுதிகள் வழங்கி பட்டதாரிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியில் போராட்டம் செய்தவர்கள் ஏங்கியிருக்க பெரும்பான்மை இனத்தவர்களுக்குப் பதவிகளைக் கொடுத்துத் திருப்திப் படுத்தி ஏமாற்றப்பட்ட பட்டதாரிகள் மீண்டும் தேர்தலுக்கு கொடிகட்டி, சுவரொட்டிக்குப் பயன்படுத்தத் திட்டமிடும் அரச மட்ட திட்டத்திற்கு எம்மவரும் தலையாட்டிகளாக ஆமா போட்டு இருப்பது தமது இருப்பைத் தக்க வைக்கத்தானே.

இவர்களின் பிள்ளைகள், உறவுகள் எவராவது பின்கதவைப் பயன்படுத்திப் பதவிக்கு சென்றதை மறைத்துப் பாமர பட்டதாரிகளுக்குக் குழிதோண்டி பழிவாங்கும் தலைவர்களே இளையோரின் தடைக்கற்களாக செயல்படுகின்றனரா?

எ நாட்டின் அரசியலில் விடாக்கண்டன் கொடாக்கண்டன் நிலை தொடர்வது எவருக்கும் ஆரோக்கியமானது அல்ல. இதனால் பாதிக்கப்படுவது பாமர மக்கள் தான்

# பாதிப்பு யாருக்கு?

என்பதனை யாரும் அக்கறை கொள்ளாததால் ஏற்படும் விளைவு வீட்டுத்திட்டம், பத்திரிகை செய்தியோடு காலம் கடத்தப்படுகின்றது. எந்த முன்னெடுப்பும் மேல் மட்டத்திலும் இல்லை, அதிகாரிகள் மட்டத்திலும் முரண்பாடான தகவலாகவே உள்ளது.

வேலையில்லா பட்டதாரிகள் விடயத்தில் போராடி அலைந்தவர்கள் இருக்க யாரோ அரச செல்வாக்குடன் பதவிகள் பெற்றவர்கள் பின் கதவால் உள்நுழைந்தவர்களாக இருப்பதை வெறும் பேச்சுடன் கரைகிறது.

எந்த விடயமும் எவர் முன் எடுக்கிறாரோ அதற்கு எப்படித் தடை போடலாம் என்ற மனநிலை வேண்டாதவன் பெண்டாட்டிக்குக் கைபட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம் என்ற நிலை இதற்குத் தானா இவர்களுக்கு அரசியல் திருமணம் செய்து வைத்தோம் என்ற மக்களின் முனகல் விவாகரத்து செய்தவர்களை இணைத்து வைத்தால் இது நடக்குமோ என்ற முன்மாதிரிகளாக வாழ்ந்து காட்டுவது வேதனை தருகிறது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் மக்கள் தான் என்பதனை உணரும் நாள் எப்போ?

திருவிழா வாழ்த்துக்களில் மட்டும் பகைமையை மறப்போம், மக்கள் வாழ்வுக்காக உழைப்போம் என்ற வார்த்தைகளில் மட்டுமல்ல வழிபாட்டிலும், வாழ்வியலாலும் தலைமைகள் செயலில் காட்டுவார்களா?

# ஐந்தில் வளைந்தாலே ஐம்பதிலும் வளையும்

எமது மாணவர்களில் இருந்து தான் சிறந்த தலைவர்கள் இனி உருவாக வேண்டும். அதனை உருவாக்குவதில் கல்வியியலாளர்கள், வழிகாட்டும் ஆசிரியர்கள், அதிபர்கள் தம்மால் உருவாக்கப்படும் மாணவர்கள் மட்டில் கூடிய கவனம் எடுத்தால் சமூக சீரின்மைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் நல்ல தலைவர்களை உருவாக்க முடியும்.

பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் மட்டும் சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதாக கருதிட முடியாது சமூகத்தில் அந்நியப்படாது இளையோரின் பங்களிப்பு, சமூக உறவு நல்ல தலைவராக எதற்கும் முகங் கொடுக்க வேண்டியதும் காலத்துக்கு தேவையானவர்களாக உருவாக்க முனைவதும் பொறுப்புள்ளோரின் கடமையாகும். இதனை ஐந்தில் வளைத்தாலே ஐம்பதிலும் வளையும் என்பதனையுணர்ந்து உருவாக்குங்கள்.

வெள்ள அனர்த்தம் ஏற்பட்டபொழுது இதனை நன்கு அறிய முடிந்தது. தமது பிள்ளை வளர்ந்து இளையோராக இருந்தும் தமது குடும்பத்தைக் காப்பாற்ற முதலுதவி கொடுக்க, அனர்த்தத்தில் இருந்து காப்பாற்ற எதுவித அறிவுமின்றி பாடப் புத்தகத்தில் மட்டும் புதைந்து இருந்ததால் வெளித் தொடர்புகள் தெரியாத மாணவர் சமூகத்தை பரீட்சையில் சித்தி வாழ்வியலில் தோல்வியடைந்த நிலையைக் காணமுடிந்தது.

இதற்கு மாணவர்கள் தமது பாடசாலைப் பருவத்தில் கற்கவேண்டியது தம்மால் முதலுதவி செய்யக்கூடிய அறிவும், அனர்த்த முகாமைத்துவ அறிவும் பாடசாலை மாணவர்களுக்கு பாடத்திட்டத்துடன் கற்பிப்பதுடன் சாரணர் போன்ற பொது அமைப்புக்களின் பங்கேற்பு சமூகம் சமூக உறவாக வளர்ப்பவர்களும் திறமை சித்தி பெறுவதற்கான அதிக புள்ளிகள் வழங்குவதை பாடத்திட்டத்தில் இணைத்தாலே பெற்றோருக்கான பொதுநல சிந்தனைகளுடன் தமது வாழ்விலும் நல்ல தலைமைத்துவமுள்ள தலைமைகளை உருவாக்க முடியும் என்பதனை பொறுப்புள்ள கல்விப்புலம் கண்திறந்தால் அனர்த்த காலத்திலும் சமூக உறவை வளர்ப்பதுடன் நல்வழி காட்டியாக நல்ல தலைவர்கள் உருவாகி உருவாக்கப்படுவார்கள். இதனை முன்னெடுப்பதில் பாடசாலைகளின் பங்கு மிக முக்கியமானது.

இதனைத் தனிமனிதன், மாணவர்கள், பாடசாலைச் சமூகம் சுய ஆய்வு செய்து பார்த்தால் நாம் எங்கு நிற்கின்றோம் சமூகப் பொறுப்பு மிக்கவர்கள் யார் யார் என்பதனை தன் சுய ஆய்வு மூலம் வெளிப்படுத்தலாம் அல்லவா? புள்ளிகளை மட்டும் எதிர்பார்த்து குதிரையோடாது தன் வாழ்வின் வெற்றி தனது சமூகத்தையும் மேம்படுத்துவதே சிறந்த வழிகாட்டலுக்குள் இணைந்த மகிழ்ச்சி இரட்டிப்பாகும்.

# பரீட்சையில் சித்தி வாழ்க்கையில் தோல்வியா?

பரீட்சையில் சித்தி பெற்றால் அதற்கு உரிமை கோருவோர் பலராக தம்மை வெளிப்படுத்த முனையும் எவரும் தோல்வி அடைந்தவர்களுக்கும் தாமே பொறுப்பு என முன் வருவார்கள் யாரும் இல்லை. இது.போலவே எமது கல்வி முறைமையில் மாற்றம் வேண்டும் என சிந்திக்கத் தவறுவதும் இன்றைய இளையோரின் எதிர்காலம் இலக்கற்றதாக செல்வதற்குக் காரணம்.

பரீட்சையில் சித்தி பெற்றாலும் வேலைகள் பெறுவது முடியாது என்ற ஏக்கம் தான் தமிழரின் கல்வி பின்னடைவிற்குக் காரணமென கல்வி வழிகாட்டிகள் புதிய கண்டு பிடிப்பாகக் கூறித் தப்பிக்கப் பார்க்கிறார்கள் இது தான் முடிவாகும். தமது கற்றல் முறையிலுள்ள குறைகளை மாற்றாது சாட்டு சொல்லவும் கல்வியியலாளர்கள் முனைந்தால் இதுவே மாணவர்கள் பின்னடைவு அதிகரிக்கக் காரணமாகும். கல்விச் சமூகம் மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

பரீட்சையில் தோல்வியுற்றோர்களை பின் தொழிற் கல்வி கற்கும் பயிற்சி முயற்சியெடுக்க முனையும். கல்விப் புலம் இதனை ஏன் மாணவர்களுக்கு கற்கும் காலத்தில் அவர்களின் நிலைகளுக்கேற்ற தொழிற் பயிற்சிகளை இணைத்து வழங்க முற்படுவதில்லை. இதனாலே தான் முன்னேற்றமடைந்த நாடுகளில் கல்வி முறையில் அவர்களுக்கு ஏற்ற தொழிலையும் பாடசாலைப் பல்கலைக் கழகங்களில் தொழில்வழங்களைப் பயிற்றுவிக்கத் தவறுவதனால் தான் தொழில் தெரிவும் அத்துறையையே தொடர முடிகிறது. இதற்கான சிந்தனைகள் உடைய கல்வியாளர்கள் உயர்மட்டத்திலோ, பாடசாலை மட்டத்திலோ புத்தகப் பூச்சிகளாகவும் தமக்கென்ன போச்சு என்ற மனநிலையில் தமது காலத்தைக் கடத்துவதால் கல்வி சீரழிவுகள் ஆண்டுதோறும் மாணவர்கள் எத்தெரிவும் இல்லாது தடுமாறுகிறார்கள்.

உயர்தர வகுப்புக்கு தெரிவாகும் மாணவர்கள் எதைத் தெரிந்து முன் செல்வது என்பதனைத் தெரியாது தடுமாறுவதற்கு சிறந்த கல்வி வழிகாட்டலை ஆண்டு 9ல் இருந்து கொடுக்க யாரும் இல்லாத நிலைகள் தான் இளைஞர்கள் சமூகத்தில் வழிதவற கல்விப்புலம் காரணமாகிறது. இதனைத் தீர்க்க முன்வரவேண்டியது யார்? எத்தனை ஆய்வுகள், ஆணைக்குழுக்கள், பல்கலைக்கழகங்கள், அமைச்சுகள் தமது நிலைகளில் இருந்து தூரநோக்குடன் செயல்பட முன்வராத பட்சத்தில் இளையோரின் பின்னடைவிற்கு கல்விச் சமூகமே பொறுப்பேற்க வேண்டும். இதனைச் சார்ந்த சமூகத்தின் சிறந்த வழிகாட்டியெனப் போற்றப்படுவார்கள். படிக்கும்போதே தொழில்தெரிவுக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அவை சார்ந்த தொழிலகங்களில் ஆறுமாத, ஒரு வருட பயிற்சியின் பின் பட்டம் வழங்கும் திட்டம் அமைந்தால் தொழில் தேடல் மிக இலகுவாயிருக்கும்.

# வீட்டுத்தோட்டம் செய்வோம்

திரு.யலியஸ் - மாதகல்

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வறுமைக்கான காரணத்தை கவனத்தில் கொள்ளும் விவசாயிகளுக்கான உணவுப்பாதுகாப்பு என்று நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் மேற் கொண்டு வருகின்றனர். அந்த வகையில் முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்களுக்கு, பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் வீட்டுத் தோட்ட விவசாயிகளுடனான கருத்தமர்வும், சத்துணவும், விதை தானியங்களும், விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

அருணோதய பாடசாலை மாணவர்களுக்கான கருத்தமர்வும் தந்தை செல்வா முன்பள்ளி பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்கான கருத்தமர்வும் கும்பிழாவளை முன்பள்ளி பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்கான கருத்தமர்வும் இடம்பெறாது.

மாவிட்டபுரம் தெற்கு ஜே/232 வீட்டு தோட்ட விவசாயத்தில் இயற்கைப் பசளை மற்றும் இயற்கையாகத் தயாரிக்கப்படும் கிருமிநாசினியற்ற தோட்டத்தை முன்னட்டையில் காணலாம்.

# யாழ் களரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com

Tel/Whats App/Viber: 077 6510375

தை - மாசி




# ஐக்கிய இலங்கையில் நிரந்தர சமாதானம், அபிவிருத்தி ஏற்பட அரசியல் ரீதியாகவும், ஆன்ம ரீதியாகவும் எவ்வாறு செயற்படலாம்

**சிவஸ்ரீ க கிருபானந்தக்குருக்கள்.**
**சோலை அம்மன் ஆலயம், சாவகச்சேரி.**

ஐக்கிய இலங்கைக்குள் நிரந்தர சமாதானத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு அரசியல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் செயலாற்றுவதற்கான வழிமுறைகள் பற்றிப் பார்ப்போம். முற்காலங்களில் பலபல போர்கள் அரசியல் காரணமாக நிகழ்ந்து பல இலட்சக்கணக்கான மக்கள் மாண்டதாகப் புராதன வரலாறுகள் மூலம் அறியக் கிடக்கின்றது. உதாரணத்திற்குச் சிலுவைப்போர் முகலாயர்களின் போர்கள் மௌரிய கலிங்கப் போர்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அனைத்துப் போர்களிலும் மத ரீதியான அபிலாஷைகளே பின்னணியில் இருந்துள்ளன. முகலாயர்களின் படையெடுப்புக்களிலும் பின்னனியில் இஸ்லாமிய அடிப்படை வாதமே காரணமாக இருந்து வந்துள்ளது. தத்தமது மதச் சிறப்புக்களை நிலைநாட்டுவதன் காரணமாக இன்னும் பல பலபோர்கள் நிகழ்ந்த வண்ணம் மக்களின் அழிவிற்குக் காரணமாக உள்ளது கண்கூடு. இப்போர்கள் தொடர்கதையாக நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கின்றது. எந்தவொரு நாட்டிலும் மக்கள் ஐக்கியமாகவும் அன்னியோன்னியமாக வாழவேண்டுமெனில் சகமக்களது மதங்களைப் புரிந்து கொண்டு சமசந்தர்ப்பங்களை வழங்கி மக்களை நல்வழிப்படுத்தினால் தான் இன ஐக்கியம் நீடிக்கும். மதங்களும் அரசியலும் வேறுவேறு பயன்பாட்டினைத் தருவனவாகும்.இந்த இரண்டு விழுமியங்களும் இரண்டு தண்டவாளங்களைப் போன்றவையாகும். இரு தண்டவாளங்களும் இணைந்தாலோ, பிரிந்து விலகிச் சென்றாலோ மக்கள் இன ஐக்கியமென்னும் தொடர் வண்டியானது சேருமிடம் சேராமல் தடம் புரண்டு போய்விடும். அரசியலானது மக்கள் அனைவரினதும் சகவாழ்வு, பொருளாதார அபிவிருத்தி , சௌக்கியம், கல்வி, தொழில் வளர்ச்சி, ஆற்றல்கள் என்பவற்றை முன்னிலைப்படுத்திப் பாரபட்சமின்றிய சேவைகளை மக்களுக்கு வழங்குதலே அடிப்படை எதிர்பார்ப்பாகும்.

(தொடர்ச்சி பக்கம் 11)



**A.M.A அஸீஸ் மௌலவி (ஹாஸ்மி) யாழ்/கிளி மாவட்ட பேரவை**
**உலமாசபை சர்வமத சமயதலைவர், அகில இலங்கை சமாதான நீதவான்**

நிரந்தர சமாதானம் இலங்கையில் உருவாக வேண்டுமென்றால் அங்கு அதை ஏற்படுத்த யார்யார் முனைப்புக் கொள்கின்றார்களோ அவர்களிடம் பொறுமை, சகிப்புத்தன்மை, சந்தர்ப்ப சூழ்நிலையைப் புரிந்து தன் செயல்படுத்தும் தன்மை, நீதி, நேர்மை, எளிமை, உண்மை என்கின்ற நற்பண்புகள் அவரிடம் ஆட்சி புரிய வேண்டும் அப்போது தான் இன, மத, பேதமற்ற எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வுபூர்வமான உயர்வான எண்ணம் மேலோங்கி நாம் ஓர் இலங்கையர் என்ற பொதுவுடைமை அங்கே புரிந்துணர்வுடன் செயல்படச் சாத்தியமாகும். ஏனெனில் நாம் எம் பின்னால் முன்னேறி வருபவர்களுக்கோர் வழிகாட்டியாக இருந்தால் பிக்கல் பிடுங்கல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கத் தேவையில்லை. எப்பொழுதும் வெள்ளைப் புறாவாக வாழலாம். இதே போல் தான் அபிவிருத்தியும். மனித வாழ்வானது எல்லாத்துறைகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது. இது செல்வாக்குச் செலுத்தாத அபிவிருத்திகள் இல்லை. இங்கே இந்த மனிதவளம் சமூகத்தையும், அரச நிர்வாக நடவடிக்கைகளையும் அனைவரும் அறிந்து தெரிந்து அதனை சமாதானமான முறையிலும் மனிதநேயத்தோடும் புனிதமான முறையில் ஒரு தலைமையின் கீழ் செயல்படுத்தினால் அபிவிருத்திகள் அழகுற அமைந்து அனைவர் அகமுகங்கள் மகிழ்வடையும் பாரபட்சம் போக்கினால் புரிந்துணர்வுகள் பூரித்தெழும். இப்போ சமாதானம் என்பது சந்தோஷமாக எம்மைச் சேரும் ஐக்கியச் சமாதானக் காற்று சூறாவளியாகி சுனாமியாக வீசும் மகிழ்ச்சி. இதையே ஆன்மீகமும் கூறுகிறது. வாழ்க்கையின் சகல கோணங்களிலும் மனிதன் சிந்தனையோடு செயலாற்ற வேண்டும் என்று. இந்த ஒரு அம்சத்தின் மூலமே பகுத்தறிவு பெற்றுள்ள மனிதன் ஏனைய உயிரினங்களை விட உயர்நிலையடைகின்றான் என்கிறது.........! இதனாலே தான் நாட்டின் தலைவரை மக்களை வழிநடத்தும் தலைவரை மக்களின் சகல விவகாரங்களிலும் இறைவழி நின்று அவர்களை வழிநடாத்தும் தலைவரை, பொறுப்புடையவரை தெரிவு செய்வதை பொதுமக்களிடம் ஒப்படைக்கிறது முக்கியம். அதற்காக சாதாரணமாக மக்கள் பின்பற்ற

(தொடர்ச்சி பக்கம் 11)



# பல்சமயத்தவர்கள் ஒரு நோக்கோடு செயற்பட வேண்டும்

**அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகள்**

இன்றைய காலகட்டத்தில் பல ஆலயங்கள் சேர்ந்து ஒரு நோக்கோடு செயற்பட வேண்டும். சமூக ரீதியான பிரச்சினைகளுக்கு முக்கியமாக இளைஞர்கள், மாணவர்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு பல்சமயத்தவர்கள் ஒன்றிணைந்து விரைவில் சமூக மாற்றத்திற்கான தீர்மானத்தை எடுக்க வேண்டும். தீய சக்திகள் எல்லாம் ஒன்றிணைந்து ஒரு வலையமாக தீயவற்றை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் அவ்வாறே நல்ல சக்திகளும் ஒன்றிணைந்து வலைப்பின்னலை உருவாக்க வேண்டும். தெளிவான திட்டங்களை முடிவெடுத்து நல்ல இலக்குகளை அடைய வேண்டும். குழுப்பயிற்சிகளை இளையோர் மாணவர்களுக்கு விளக்க வேண்டும். தனி மனிதன் தீவாக முடியாது. இணைந்து செயற்பட வேண்டும். இணைவதற்கான வாய்ப்புக்களைக் கண்டு பிடிக்க வேண்டும். பேச்சாளராக இருக்காமல் செயற்படும் தலைவர்களாக சத்தியம், தர்மம், நீதிக்குக் குரல் கொடுக்க வேண்டும். சமயத் தலைவர்கள் சடங்குகளோடு மட்டும் நிற்காமல் சமயங்களுக்கு அப்பால் மனிதத்தை நேசிக்கும் மதத் தலைவர்களாக மாற வேண்டும். உறங்கு நிலையிலிருந்து விழித்தெழ வேண்டும். மனிதம் மலர மனிதத்திற்கெதிரானவற்றைக் கண்டு பிடிக்க வேண்டும். இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையத்தின் உரையாடல், உறவாடல் விடியலை விரைவில் கொண்டுவரும் என அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகளார் மேலும் தெரிவித்தார்.

(தொடர்ச்சி பக்கம் 08)



# ஆட்சிக்காக அரசியல் பேசாதிருந்தால் நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்ப முடியும்

**மிகாயந்துரே ஸ்ரீவிமலதேரர்**

இலங்கையில் நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியமாக அரசியல்துறையில் ஈடுபடுபவர்களும் மற்றும் மதகுருமார்களும் ஒற்றுமையாகசெயல்படல் வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் இரண்டு பிரதான மொழிகளான சிங்களம், தமிழ் காணப்படுகின்றது. அதில் இனங்களுக்கிடையில் காணப்படும் பிரச்சனைகளால் மக்கள் மனம் தாக்கப்பட்டுக் காணப்படுகின்றது. நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையர் என்ற வகையில் உலகில் முன்னுக்குப் போக முயல வேண்டும். இனங்களுக்கிடையிலான தகராறுகளிலும், மார்க்க மதங்களுக்கிடையிலான தகராறுகள் குறைவாகவே

( தொடர்ச்சி பக்கம் 04)

# ஆலயங்கள் பெருகியது ஆன்மீகம் வளர்ந்துள்ளதா?



ஜெ.தருமராஜா
யாழ்.மாவட்ட இணைப்பாளர். இலங்கை பல்சமயக் கருத்தாடல் நிலையம்

இந்தப் பூமியில் பிறந்த அனைத்து உயிரினங்களும் ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும் என்ற பொது விதிக்கமையப் பிறந்த உயிரினங்களில் மனிதர்கள் தம்மை இறைவன் விசேடமாகப் படைத்துள்ளார் எனக் கூறிக் கொண்டும், புதிய புதிய கடவுள்களை மண்ணும், சீமெந்தும் , கல்லும், கம்பியும், தண்ணீரும் கொண்டு உருவாக்கி அதனை வழிபடுங்கள் எனக் கூறுகிறார்கள்.

முன்னைய காலத்தில் பல ஞானிகளும் அவதார புருஷர்களும் வாழ்க்கை என்றால் என்னவென்று வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார்கள். தற்காலத்தில் அப்படியானவர்களைக் காணக் கிடைத்தல் அரிதாகி விட்டது உண்மையாக ஆன்மீக வழியில் தமது வாழ்க்கைப் பயணத்தை மேற் கொண்ட எவரும் ஆலயம் அமைத்து வழிபடுதல் பற்றிப் போதிக்கவில்லை. பிற்காலத்தில் வந்த சமய வாதிகள் தம்மையும் ஆன்மீகவாதிகளாகக் காட்டிக்கொண்டு தமக்குள்ளே போட்டி போட்டுக் கொண்டு ஆலயங்களை அமைப்பதும் அதில் தமது பலத்தைக் காட்டிக் கொள்வதற்காகப் பாதிக்கப்பட்ட வறுமையான தேவைகள் உடைய மக்களைத் தேடிப்பிடித்துப் பக்தர்களாக மாற்றுதல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றார்கள். அத்துடன் நின்று விடாது தமது ஆலயப் பகுதிக்குப் புனிதப் பிரதேசம், புனித பூமி எனவும் பெயரிடுகின்றார்கள். அப்படியானால் அந்த எல்லைக்கு அப்பால் இருப்பது நரகமா எனக் கேட்கத் தோன்றும்.

ஆலயங்கள் பெருகும் போது ஆன்மீகம் குறைந்து விடும் என்று சமயவாதிகளுக்கு விளங்காது. ஏனெனில் அவர்களுக்கு இவற்றைக் கேட்கக் கூடிய காதுகள் இல்லை. உலகநாடுகளிலே ல மிகவும் சத்தம் போட்டுப் பிரார்த்தனை செய்பவர் கள் இலங்கையிலும், இந்தியாவிலும் தான் கூடுதலாக இருப்பதாக கணிப்புக்கள் கூறுகின்றன. ஒரு சமயத்தலத்தில் கட்டைக்கோண் கட்டினால் மற்றைய சமயத்தலத்தில் பெரிய கோண், மற்றைய சமயத்தலத்தில் வீதி முழுவதும் அதற்கடுத்தவர் ஊர் பூராவும் எனச் சத்தமாக ஒலிக்க விடுவார்கள். அதன் பின்னர் எமது சமய விழாவிற்கு எவ்வளவ சனம் வந்தது. எவ்வளவு பணச்செலவு தெரியுமா? எனப் பெருமை பேசுவார்கள். உண்மையில் அமைதி இல்லாத இடத்தில் ஆன்மீகம் கிடைக்காது என்பதும் சமயவாதிகளுக்குத் தெரியும். ஆனாலும் காட்டிக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் அவர்களின் தேவையும் நோக்கமும் மதிப்பு, மரியாதை, பணம், புகழ் என்பதாகும். நல்ல பாதைகள் இருக்கும் போது கல்லும் முள்ளும் நிறைந்த இடத்தில் தான் பயணிப்போம் எனத் திடம் கொண்டு செயற்படுபவர்களை அவர்களின் வழியில் விட்டு விட வேண்டும். அதற்கான பலனை அவர்களின் பயணப் பாதையிலேயே அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

இரவு, பகல், நன்மை, தீமை, சண்டை, சமாதானம் என்பனவெல்லாம் மாறி மாறி வரும் நிலைகள். இதனை எந்தக் காலத்திலும் எவராலும் ஒரு விடயத்தை மட்டும் நிரந்தரமாக்க முடியாது. ஏனெனில் இவையெல்லாம் மாறி மாறித் தொடர்ந்து கொண்டிருப்பவை உண்மையான ஆன்மீகத்தினைப் பெற்றுக் கொள்வதற்குப் பணம் தேவையில்லை. எமது இலங்கைத்தீவில் உள்ள அனைவரும் சமாதானத்தை விரும்புகின்றார்கள். ஆனால் ஒவ்வொருவரும் தமக்குச் சாதகமான முறையில் அமைய வேண்டும் என்றே பிரார்த்தனையும் செய்கின்றார்கள். மன்னித்தல், விட்டுக் கொடுப்பு, மனந்திறந்து பேசுதல் என்பவற்றில் அவர்கள் இன்னும் இடைவெளி விட்டே வாழ்கின்றார்கள். ஒவ்வொருவரும் மனந்திறந்து மன்னிப்புக் கேட்பதற்கும், மன்னிப்பு வழங்குவதற்குமான மனநிலையை உருவாக்கும் வரை

நாட்டில் உண்மையான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் சமனாக இலங்கையர் என வாழ வேண்டும் என விரும்பும் ஒவ்வொரு பிரசையும் தேர்தல் காலத்தில் இனங்களின் பெயராலும், மதங்களின் பெயராலும் பிரச்சாரம் செய்து வாக்குக் கேட்கும் வேட்பாளர்களைப் புறக்கணித்து நாட்டின் அபிவிருத்திக்கும் அனைத்து மக்களின் நலனுக்காகவும் செயலாற்றக்கூடிய நல்ல தலைவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

# எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்

- நூல் நுகர்வு -




யாழ்களரி ஆலோசகரும், முன்னாள் ஈழநாடு பத்திரிகை மூத்த பத்திரிகையாளருமான **திரு.எஸ் பெருமாள்** அவர்களின் **" எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்"** என்ற சிறுவர் கதை கூறும் வில்லுப்பாட்டு நூல் சமூக விழிப்பூட்டலுக்கு சிறந்த வரவாக இலக்கிய பகுதியில் பதிவாக்கியது பாராட்டத்தக்கது.

அருகிவரும் வில்லுப்பாட்டுக்குப் புத்துயில் அளிக்க முனையும் இந்நூல் மிருகங்கள் உருவகமாகப் பேசும் வில்லுப் பாட்டின் மூலக்கதையில் சிங்கமும் நரியுமே கதாநாயகராக நம்ம நாட்டு சூழலை நினைவுபடுத்தும் பல சம்பவங்களை மீட்டுப் பார்க்க வைக்கும் நம்மூர் நரிகளின் நினைவுகள்.
" கெட்டவர்கள் என்ன தான் நல்லவர்கள் போல் நடந்து கொண்டாலும் அவர்களை அப்படியே நம்பிவிடக் கூடாது. மிக ஜாக்கிரதையாகவே அவர்களுடன் பழக வேண்டும் என்பதனைத்தான் இந்த சம்பவம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது."


**"வாக்குச் சீட்டைப் போல் வடையை நினைத்தாயோ**
**வாங்கிடல் எளிதென எண்ணம் கொண்டாயோ**
**போக்குக் காட்டியிதை ஒடுங்கி விடுவாயோ**
**மூக்குடைபட்டபின் முழுசுகின்றாயோ**
**எத்தனை காலம் மான் ஏமாற்றுவீர்களடா**
**இந்த கா(நா)ட்டிலே"** என வரிகள் நரிக்கதைகளை பலவாறு சிந்திக்கத் தூண்டும் வில்லுப் பாட்டை பொதுச்சந்திப்புக்களில் பாடசாலை மாணவர்களாலே அரங்கேற்றுவதில் தான் இந்நூலின் இரசனையை இரட்டிப்பாகக் காணமுடியும். இம் முயற்சியில் முன்னின்று செயற்பட்ட மூத்த பத்திரிகையாளர் முயற்சிக்குப் பாராட்டுக்கள்

## அளவெட்டி - மாசியம்பதி புனித செபஸ்தியார் ஆலய நூற்றாண்டு விழா ஜனவரி 20ம் திகதி சிறப்பாக நடைபெற்றது









# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த

## அரசியல் ரீதியாவும் ஆன்மீக ரீதியாகவும் எவ்வாறு செயற்படுத்தலாம்

மௌலவி அல் கார் ஏ.எம்.றழீம் (மக்கீ)
பெரிய கடைப் பள்ளி . செம்மா தெரு



இலங்கையில் நிரந்தர சமாதானம உருவாக வேண்டுமானால் முறையான அரசியலும் தெளிவான ஆன்மீகமும் இருக்க வேண்டும் பொதுவாக ஒரு மனிதனின் எல்லா செயற்பாடுகளுக்கும் காரணமாக அமைந்திருப்பது அவருடைய உள்ளம் ஒரு மனிதன் நல்ல விடயங்களைச்செய்தாலும் கெட்ட விடயங்களைச்செய்தாலும் அதனுடைய அடிப்படைக் காரணம் என்னவாகவிருக்கும் என்று நாங்கள் ஆராய்ந்து தேடி புரட்டிப்பார்க்கும் போது ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கக்கூடிய அவனுடைய உள்ளம் அதில் சம்மந்தப்படுகிறது.எனவே உலகத்தில் சமாதானமும், சமத்துவமும்,ஒற்றுமையும் வரவேண்டுமால் மனிதனுடைய உள்ளத்தை பதப்படுத்தி சீர் செய்து அமைதிப்படுத்தினால் அது சாந்தியானால் எல்லாப்பிரச்சினைகளும் குறைந்து விடும.

தனி ஒரு மனிதன் அவனுடைய உள்ளம் பரிசுத்தமாகி விட்டால் அவனுடைய எல்லா செயற்பாடுகளும் சீரானதாக நல்லதாக அமைந்து வீடும்.இப்படி ஒவ்வொரு வரும் அவர்களுடைய உள்ளங்களை சீராக்கி விட்டால் அவர்களுடை அனைத்து செயற்பாடுகளும் சீராகி விடும்.இதை தான் ஆன்மீகமும் ஆன்மீகவாதிகளும் எமக்கு கற்றுத் தருகிறார்கள்.முஹம்மத் நபி ஸ்ல்லல்லாஹ்ரீ அனைவரிவஸல்லம் சொன்னார்கள்.உடம்பில் ஒரு சதைப்பிண்டம் இருக்கின்றது.அது சீராகி விட்டால் முழுஉடம்பும் சீராகி விடும்.அது கெட்டு போய் விடும் அது தான் உள்ளம் என்றார்கள்.எனவே நாங்கள் அமைதியைத் தேடுகின்றோம் என்றால் நமது உள்ளத்தை பயன்படுத்தி அதனை சீர் செய்வதன் மூலமாகத்தான் நிரந்தர அமைதியையும்,சமாதானத்தையும், ஒற்றுமையையும் அடையலாம் என ஆன்மீகம் எங்களுக்கு தெளிவாகக் கூறுகின்றது.

அத்தோடு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசியலும் ஆட்சியாளர்களும் மிக முக்கியமானவர்கள் பொறுமையே வீரத்தின் விளை நிலம் என்ற மொழிக்கேற்ப பொறுமையுடன் பக்கச்சார்பில்லாமல் நீதியாக மக்களுடன் நடந்துகொள்ள வேண்டும் எல்லா மதங்களுக்கும் மதச் சுதந்திரமும் கொடுக்க வேண்டும் நாம் பின்பற்றும் மதங்கள்ள முறையாக பின்பற்றுவதுடன் ஏனைய மதங்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையையும் கொடுக்க வேண்டும் அனைத்து மக்களும் இலங்யைர் என்ற உணர்வோடு பார்க்க வேண்டும் அன்றைய ஜனநாயகத்திற்கு எவ்வளவு உரிமை வழங்கப்பட்டிருந்தது தெரியுமா?

உமர் (ரழி) அவர்கள் ஜனாதிபதியாக பொறுப்பு ஏற்ற பின் மக்களைப்பார்த்து கூறினார்கள் என்னுடைய ஆட்சியின் போது ஏதாவது குறையோ குற்றமோ நேர்ந்து விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்.என்று வினா தொடுக்கின்ற போது ஒரு மனிதர் தன் கழுத்தில் கத்தியை வைத்து தலை கொய்வதைப்போல் சமிக்கை செய்து காட்டினார்.அது கண்ட ஜனாதிபதி உமர்(ரழி) அவர்கள் மாறளவு கண்ணீர் வடித்து சமிக்கை செய்த அந்த நபரை பாராடி என் ஆட்சியில் இவ்வளவு தைரியமாக ஒவ்வொரு நபரும் இருக்கும் நிலை கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.என்று பட்டவர்தனமாய்ப் பேசி நல்லாட்சிக்கு தேன் சொல்லூட்டி அமர்ந்தார்கள். அதே போன்று மத நல்லிணக்கம் ,சகோதரத்துவம், இனபேதமின்மை, குல பேதமின்மை, ஏழை பணக்காரர் பாகுபாடின்மை, பெண்ணுரிமை, பேச்சுரிமை,சொத்துரிமை,கல்வியுரிமை,அத்தோடு எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் இது நிரந்தரமாகநடந்தால் நிலை குலையாத சமாதானத்தை ஏற்படுத்தலாம்.ஆன்மீகமும் அரசியலும் பாலும், தேனும் போல் பரிசுத்தமாய் உலாவுமானால் நிரந்தர சமாதானம் விரைந்தேகி அத்தருணங்களே பனிபடர்ந்த சோலைகளாய் எந்நாளும் அணி வகுத்து நிற்கும் என்பதில் ஐயப்பாடில்லை.

# குவாண்டிற்றி கூடுகிறது குவாலிற்றி கூட வழி ஏது?

"சோதனைமேல் சோதனை போதுமடா சாமி வேதனை தான் வாழ்க்கை எண்டால் தாங்காது பூமி" என்ன பாட்டோ மனப்புகைச்சலை காட்டுறீர் விசு அண்ணே! எந்த வெள்ளம் வந்தாலும் அள்ளிப் போறது நம்ம பக்கம் தானே இதில அரசியல் எண்டாலும் ஆட்சி மாற்றம் எண்டாலும் கடசியா நம்ம ஆளுகளத் தான் தாக்குது பார்.

பொங்கல் பொங்க வேண்டியதுகள் வெள்ளத்தில அள்ளிப் போனதை நினைச்சு மனசு பொங்குது கவலையோட பத்திரிகையில அழிவுக்கு உதவி தாறதா சொன்னாலும் அது எப்ப வந்து சேரும்? இதுகள் எப்படி எப்ப வீட்டில பொங்குறது?

## கேட்டியளே சங்கதி




வறட்சி நிவாரணங்கள் வெள்ளத்துக்கை வரும். வெள்ள நிவாரணங்கள் வறட்சிக்கை வரும். இது காலம் கண்ட அரச சூத்திரம் தானே. இதில இந்த வெள்ள நிவாரணம் வாறதுக் கிடையில எத்தினை தேர்தல் நிவாரணம் எண்டு அலையப் போகுதுகள் சனம் பாரேன் எண்ட விசு வாத்தியின் அனுபவ சொல்லிலேயும் அர்த்தம் இருக்கத்தான் வேணும்.

அரசியல்ல இப்ப பொங்கி சரியேக்கையும் சோதனை யாருக்கு வெள்ளம் அடிச்சுது பாத்தியா விசு அண்ணே?

ஓம் ஓம் கடசியா இருந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் அரசியல் வெள்ளம் வந்து அடிச்சிட்டு போச்சு. ஆசை ஆரை விட்டிச்சு பிரதமர் ஜனாதிபதி, எதிர்க்கட்சி தலைமை இறங்குமுகமா இருந்தாலும் எதையாச்சும் ஏத்துக்கிறதுக்கும் எத்தனை சிக்கலாய்ப்போச்சுப் பாரன்.

இனி எப்பிடி நல்ல தலைவர்களைக் காணப்போறம் எல்லாம் ஒரே குட்டையில ஊறிய மட்டையள் தானே? அடுத்த முறையும் இவையளத் தானே அங்க போறதுக்கு வரப்போகினம். இது தான் எங்கட நாட்டு தலையெழுத்தோ தெரியல்ல அண்ணே.

தம்பி எதுவும் பானையில இருந்தாத் தானே அகப்பையில வரும் இப்ப படிப்பிலயும் பின்னுக்கு எங்கட சனம் எண்டா யாரும் கவலைப்படுகினமோ சொல்லு. அந்த படிப்புக் கூட வாழ்க்கைக்கு உதவாட்டி எப்படி நல்லதை சொல்லிக் கொடுக்கினம்

என்ன இப்ப தானே இன்னும் அதிகமாக பல்கலைக் கழகத்துக்கு மாணவர்களை எடுக்கப் போயினமாம். அப்ப எல்லாரும் பட்டதாரிகள் தானே அண்ணே?

தம்பி குவாண்டிற்றி அதிகமானாலும் குவாசிற்றி குறைவானதால தானே ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாமல் போச்சு தில்லை, இப்ப உள்ள கல்வியில பட்டதாரிகள் வாறவையள் படிப்பு சான்றிதழ் இருந்தாலும் அது சார்ந்த அனுபவ அறிவு புத்தகத்தோட போச்சுது பார்தம்பி,

நாடகம் அரங்கியல், விவசாயம் இது போல எது படிச்சாலும், ஒரு நாடகம் போடச் சொல்லு பார்ப்பம் அரங்கையே தெரியாதவர்கள் நாடக அரங்கியல் பட்டதாரியா வந்தா? விவசாய பட்டதாரி விவசாயக் கல்வியில ஏதாவது விதைச்சு அல்லது ஒரு வீட்டுத் தோட்ட அனுபவம் கூட இருந்தா பரவாயில்லை. மெக்கானிக் இஞ்சினியருக்கு சைக்கிளுக்குக் கூட காத்து அடிக்க, திருத்தத் தெரியாத புத்தகப்பூச்சிகள உருவாக்கிப் போட்டு பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்கு அலையிற போது அரசு தன்ர கல்விக் கொள்கை பற்றி சிந்திக்காது பண்டி குட்டியள பெருக்கி அரசு என்ன பண்ணப்போகினம் பாரு எல்லாம் தொகையில அதிகம் இருந்தென்ன, தரத்திலயும் எல்லோ கவனம் செலுத்த வேணும். இதனால தானே எங்கட தலைமையிலயும் தரங்கள் இல்லாது தேடித் திரியிறம்.

பாடசாலையில படிக்கிறதோட அவயளின்ர ஆற்றலை செயல்முறைப் பயிற்சி மூலம் கண்டு கற்பித்து தூண்டுறதால தானே வெளிநாட்டில படிப்போட சேர்ந்த வேலையும் கற்றுக் கொள்ளினம். இங்க அப்பிடியே சொல்லு.

எங்கட வழிகாட்டும் கல்வியாளர்கள் நொண்டிச்சாட்டு சொல்லுறமாதிரி படிச்சா வேலை கிடைக்காது எண்டதால தான் உயர்கல்வி தரம் குறைஞ்சதா சாட்சி சொல்லி தப்பிக்கினம். எல்லாம் எங்கட தலைவிதியா? இதை மாற்ற வழிகாட்ட கொஞ்சம் அக்கறை உள்ளவர்கள் முன் வந்தால் வெற்றி நிச்சயம் என்ன சிந்தியுங்கோ.

## பாராட்டி வாழ்த்துகிறோம்




**திருமதி ஜெமல்டா ஜெபரத்தினதாஸ்**
(B.A Hons, PGDE)

யாழ்ராகஸ்வரம் கலைமன்றத் தலைவரும், CSLMRD நிர்வாக உறுப்பினரும், நல்லூர் சென்.பெனடிற் வித்தியாலய ஆசிரியருமான இவர் 22.01.2019 அன்று யாழ்.பல்கலைக்கழக 34வது பட்டமளிப்பில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சிறப்புத் தேர்ச்சி பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

# இலங்கை இராணுவ அதிகாரிக்கு லண்டன் நீதிமன்றம் பிடியாணை

## குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் நிருபணம் புலம்பெயர் தமிழர்கள் வெற்றிகளிப்பில்



லண்டனிலிருந்து ப.சுகிர்தன்

லண்டன் வாழ் தமிழர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த இலங்கை தூதரகத்தின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி பிரியங்கா பெர்னாண்டோவிற்கு எதிராக லண்டன் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் இன்று நடைபெற்ற இறுதிக்கட்ட வழக்கில் அவருக்கு எதிரான இரு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு பொது ஒழுங்குகள் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் பிரிவு 4 ஏ மற்றும் பிரிவு 5 சட்ட விதிகளுக்கு அமைவாக பிரியங்கா பெர்ணான்டோ குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டதுடன் அவர்மீது பிடியாணை உத்தரவையும் நீதிபதிகள் குழு பிறப்பித்துள்ளனர்.

இந்த உத்தரவு பிரித்தானியாவின் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் நீதிமன்றினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த அதிகாரி பிரித்தானியாவிற்கும் பிரவேசிக்கும் எச்சர்ந்தப்பங்களிலும் கைதுசெய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் சட்ட ஆலோசகரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான கீத் குலசேகரம் அவர்களின் வழிநடத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் சார்ப்பில் ஐஊீபு அமைப்பு தாக்கல் செய்த குறித்த குற்றவியல் வழக்கு வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியினை ஒட்டுமொத்த தமிழர்களும் கொண்டாடிவருவதுடன் இதேபோல் யுத்தக்குற்றவாழிகள் சர்வதேச நீதிமன்றங்களில் தண்டிக்கப்படவேண்டும் என சமூகவலைத்தளங்களில் கருத்துக்களை பதிவுசெய்தும் வருகின்றனர்.

லண்டன் வாழ் தமிழர்களுக்கு கொலை அச்சுறுத்தல்



விடுத்த இலங்கை தூதரகத்தின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி பிரியங்கா பெர்ணான்டோவுக்கு எதிராக பாதிக்கப்பட்டவர்கள் சார்ப்பிழல் ஐஊீபு அமைப்பு தாக்கல் செய்த வழக்கின் இறுதி வழக்கு இன்று வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் நடைபெற்றது.

குற்றச்சாட்டுக்குள்ளான பிரியங்கா பெர்ணான்டோவுக்கு மூன்றாம் கட்ட வழக்கின் போது நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்த நிலையில் இன்றைய இறுதிக்கட்ட வழக்கு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் காலை 11.00 மணியளவின் நீதிமன்றின் 8 ஆம் இலக்க அறையில் மூன்று விசேட நீதிபதிகள் குழு முன்னிலையில் பிரியங்கா பெர்ணான்டோவுக்கு எதிரான இறுதிக்கட்ட வழுக்கு விசாரணைகள் ஆரம்பமாகின.

பாதிக்கப்பட்டவர்கள் சார்ப்பில் மயூரன் சதானந்தன் கொகுலகிருஷ்ணன் நாராயணசாமி வினோத் பிரியந்த ஆகியோரும் முக்கிய சாட்சிகளாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கம் மற்றும் குறித்த வீடியோவினை பதிவு செய்த சபேஷ்ராஜ் சத்தியமூர்த்தி ஆகியோரும் மன்றில் ஆயராகி இருந்தனர்.

குற்றம் சாட்டப்பட்டவரான பிரியங்கா பெர்ணான்டோ குறித்த வழக்கில் சமூகமளிக்கவேண்டுமென ஏற்கனவே நீதிமன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்த நிலையிலும் அவரோ அல்லது அவர் தரப்பிலிருந்து எவரும் இன்று நீதிமன்றில் சமூகமளித்திருக்கவில்லை.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில்ீரடிடஉை Interest Law Centre என்ற சட்ட நிறுவனத்தை சேர்ந்த Paul Heron மற்றும் Helen Mowat ஆகியோர் தமது தரப்பு வாதங்களை நீதிபதிகள் குழுவின் முன் சமர்ப்பித்ததுடன் குறித்த சர்ச்சைக்குரிய காணொளியும் நீதிபதிகளிற்கு காண்பிக்கப்பட்டது.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையில் பிரியங்கா பெர்ணான்டோவுக்கு எதிராக மு...வைக்கப்பட்ட 3 குற்றச்சாட்டுக்களில் இரு குற்றச்சாட்டுக்கள் மன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அவர் குற்றவாளி என மன்று அறிவித்தது.

அதேவேளை குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவருக்கு எதிராக பிடியாணை ஒன்றும் நீதிபதிகள் குழுவினால் பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த பிடி உத்தரவு பிரித்தானியாவின் அனைத்து பொலிஸ் நிலையங்களிற்கும் அனுப்பிவைக்கப்படும் என மன்றினால் அறிவிக்கப்பட்டதுடன் அவர் பிரித்தானியாவில் பிரவேசிக்கும் எச்சர்ந்தப்பத்திலும் கைதுசெய்யப்பட்டு மன்றில் ஆஜர்ப்படுத்தப்படுவர் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குற்றவாளியான பிரி...ங்கா பெர்ணான்டோ யுத்தக்குற்றங்களை இழைத்தவர் என்பதினை நீதிமன்றில் பத்திரங்களில் ICPPG ...ால் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டிருந்...திலும் அது பற்றிய வழக்கு இன்று நடைபெறவில்லை. ஆனாலும் அவர் யுத்தக்குற்றங்களை இழைத்தவர் என்பதனை இன்றை வழக்கு விசாரணையின் போது பதிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பின்னணி

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தின் போது (2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி) லண்டனிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்னால் பிரித்தானியா வாழ் தமிழர்களால் பாரிய எதிர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

இதன் போது தூதரகத்தின் அப்போதைய பாதுகாப்பு அதிகாரியான பிரியங்கா பெர்ணான்டோ தூரகத்திற்கு வெளியே வந்து ஆர்ப்பாட்டக்காரர்களை தனது தொலைபேசியில் படம் பிடித்ததுடன் அவர்களைப்பார்த்து கழுத்தை வெட்டுவேன் என்ற சமிக்ஞையுடனான கொலை அச்சுறுத்தலும் விடுத்திருந்தார்.

குறித்த காணொளி ஊடகங்கள் மற்று சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி...டுத்து உலகத்தமிழரிடையேயும் சர்வதேச அ...ும் பெரும்




அதிர்வலையை ஏற்படுத்த, இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு குறித்த அதிகாரியை பணிநிறுத்தம் செய்தது. எனினும் இலங்கை ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய அவரது பணிநீக்கம் இரத்து செய்யப்பட்டு தொடர்ந்தும் பணியில் அமர்த்தப்பட்டார்.

இதனையடுத்து கொலை மிரட்டல் விடுத்த இராணுவ அதிகாரியை பிரித்தானிய பொலிஸார் கைது செய்ய வேண்டுமென கோரி லண்டனில் உள்ள பொதுநலவாய அலுவலகத்திற்கு முன்னாள் ஒட்டுமொத்த லண்டன் வாழ் தமிழர்களும் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தினர்.

அதேவேளை, குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிராக பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. இதனையடுத்து பிரியங்கா பெர்ணான்டோ இலங்கைக்கு திருப்பி அழைக்கப்பட்டார்.

எனினும் கொலைமிரட்டல் விடுத்த இராணுவ அதிகாரி லண்டனுக்கு வரவழைக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட வேண்டுமென பிரித்தானிய அரசுக்கு அழுத்தங்கள் தெரிவிக்கப்பட்டதுடன் அவருக்கு எதிராக நீதவான் நீதிமன்று நீதிமன்றில் வழக்கும் தொடுக்கப்பட்டது.

இந்நிலையிலேயே இன்... இன்றைய இறுதி வழக்கில் யுத்தக் குற்றவாளியான பிரியங்கா பெர்ணான்டோ குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு எதிராக பிடியாணை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# ஜோதிட விஞ்ஞானம்

ஜோதிர்வித்யாரத்னா V.A சிவராசா B.A,BPhil, Dip.in.Edu
56, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 8708

## விண்ணில் வியாழ மாற்றம் மண்ணில் உங்கள் யோக பலன் (04.10.2018 - 04.10.2019)

**மேடம் (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1)**
கடவுளே அட்டமத்து வியாழன் வருகின்றார்.வாரி பட்டமிழறந்தது போல உங்கள் பதவிக்கும நடத்தைக்கும் கேடு உண்டாகலாம்.வியாழக்கிழமைகளில் தட்சணாமூர்த்திக்கு அர்ச்சனை வழியாடு செய்துவர கண்ணிற்கு வந்நது புருவத்துடன் போய் விடலாம்.எவருக்கும் பொறுப்பின்றி எதையும் கொடுக்கவேண்டாம்.வெளியூர் பிரயாணத்தை இடை நடுவில் கைவிடவேண்டி நேரிடலாம். பாலியல் நாடகங்கள் அரங்கேற்றலாம். வாகன விபத்தில் எச்சரிக்கையாக இருங்கள். பெற்றோர்களின் தேகநலம் பாதிக்கப்படலாம். திட்டமிடாத செயல்களினால் வாழ்க்கை படுவீழ்ச்சி அடையலாம். மின்சாரம் பற்றி மிகமிக எச்சரிக்கையாக இருங்கள் 4.10.2018 தொடக்கம் 4.10.2019 வரை வியாழமாற்றம் கெடுதலான பலன்களைத் தந்து விடலாம்.

**இடபம் (கார்த்திகை 2,3,4, ரேகனிணி, மிருகசீரிடம் 1,2)**
வச்சிரமாமுனிவரை விலங்கிலே மாட்டிய 6ம் இடத்து வியாழன் 4.10.2018 இல் நீங்கி விடுவதனால் எடுத்த காரியங்கள் நிச்சயம் வெற்றியைத் தரும். திருமணம் நிறைவேறும். வெளியூர் பயணம் அந்த மாதிரி பலன் கொடுக்கும். கைவிட்ட உறவுகள் நாடிதேடி ஓடி வரும்பொறுப்பின்றி கொடுத்த கடன் தெய்வ செயலால் கிட்டும் பென்சனுக்குப் பின்னும் மீள் நியமனம் கிடைக்கும் கணவன் மனைவி உறவில் ஏற்பட்ட விரிசல் நீங்கி விடும் இடைத்தங்கல் நாட்டில் உறைவோர் விரும்பிய இடங்களைச் சென்றடைவர். புதிய ஜீவன் உருவாகும். கலைஞர்கள் விளையாட்டுத்துறையினர் பரிசில்கள் பாராட்டுப்பெறுவார்கள். கல்விப்புலத்தில் சாதனை புரிவார்கள். விவசாய முயற்சிகள் இலாபந்தரும்.வாகன யோகமுண்டாகும்.

**மிதுனம் (மிருகசீரிடம் 3,4, திருவாதிஎர, புனரபூசம் 1,2,3)**
வச்சிரமாமுனிவரை விலங்கிலே மாட்டிய 6ம் இடத்து வியாழன் 4.10.2018 தொடக்கம் ஒருவரிடத்திற்கு உங்களை ஆட்டிப்படைக்கப் போகின்றார். வங்கிக்கணக்கிலும் காணி உறுதியிலும் மோசடிகள் ஏற்படலாம். செய்யாத குற்றத்திற்கு தண்டனை அனுபவிக்கலாம் சகோதரர்களுடனான மாறுபட்ட மனப்போக்கினால் உறவுகள் கெட்டுவிடலாம் திருடர்கள் பற்றி மிக விழிப்பாக இருக்கவும் வாகனப் பயணத்தில் அதிகூடிய கவனம் எடுக்கவும். விலங்குகள் குறுக்கே பாய்ந்து விபத்தினை ஏற்படுத்தலாம்.புதிய நட்பினை முளையிலே கிள்ளி விடலாமெனினும் அவர்களின் உபத்திரவம் நிழல் போலத்தொடரும் கணவன் மனைவி மத்தியில் சந்தேகக் கோடு ஏற்பட்டு பிணக்குகள் வலுக்கும். அதிஷ்டலாபச் சீட்டு (சுவிப்) மூலம் அதிர்ஷ்டமுண்டு. கால்நடைகள் வளர்ப்பில் கவனம் செலுத்தும் விருப்பம் ஏற்படலாம்.

**கற்கடகம் (புனரபூசம் 4, பூசம், ஆயிலியம் )**
தர்மபுத்திரரை வனவாசஞ் செல்ல வைத்த 4 இல் இருந்த வியாழன் தெய்வ செயலாக நீங்கி 5ம் இடக்கோசர நிலைக்கு குருபகவான் வருகின்றார்.விவாகம் நிறைவேறி குழந்தைப்பாக்கியம் ஏற்படும்.வெளிநாட்டுப்பிரயாணம் அந்தமாதிரி வெற்றிதரும்.பிரிந்திரிந்த காதல்ஜோடிகள் மீண்டும் ஒன்று சேர்வர்.நீண்ட காலத்தின் பின்னர் சொந்தக் காணியில் கால் பதிப்பர் புதிய வீடு கட்ட இடம் தெரிவு செய்வர். களவு போனவை மீண்டும் கைக்கெட்டும் மாமன்மார் உறவினால் வசந்தகாலம் பிறக்கும் திருமணநிமித்தம் வெளிநாட்டு மணமக்கள் வாயகம் வந்து திரும்புவர்.ஜாதகத்தில் நடப்பு மகாதிசாபுத்தி நன்றாக இருப்பின் வாகன் யோகத்தை நாடுங்கள்.சிலருக்கு முறை தவறிய காதலும் வயோதிபத்தில் திருமணமும் தத்துப்புத்திர யோகமும் கிட்டலாம்.சுரண்டல் மூலம் பணம் கிடைக்கலாம்.

**சிங்கம் (மகம், பூரம், உத்தரம் 1)**
குருபகவான் நாலாமிடத்தில் வந்துற்ற காலை தர்மபுத்திரர்கள் வனவாசஞ் செய்ய வெளிக்கிட்ட கதையை மறக்க வேண்டாம். பயண முயற்சிகள் கிடைத்தற்கால் நாட்டில் சேர்ந்து விடலாம் எதிரிகளின் அடாவடித்தனத்தினால் மனநிம்மதி மறந்துவிடலாம். சம்பளம் போதாமையினால் தொழிலைக் கைவிட்டு தனித்தியங்க வர்த்தக முயற்சிகளில் ஈடுபடல், சிலருக்கு பரீட்சைப் பெறுபேறு பாதிக்கப்பட்டதனால் தற்கொலை எண்ணம் ஏற்படலாமெனினும் நண்பர்களின்



புத்திமதியினால் வாழவேண்டும் என்ற வைராக்கியம் ஏற்படும் காணாமல் போனவர் உயிருடன் இருக்கின்றார் என்ற செய்தி கேள்வியுற்று ஆனந்தமடைவீர்கள்.

**கன்னி (உத்தரம் 2,3,4,அத்தம்,சித்திரை 1,2)**
வியாழபகவான் மூன்றாமிடத்திற்கு வருகை தந்த போது துரியோதனன் முதலியோர் போரிலே மாண்டார்களாம். சிலருக்கு நோய் காரணமாக தைரிய வீரியக்குறைவு ஏற்படலாம். பிள்ளைகள் விடுகின்ற தவறுகளை பவ்வியமான முறையில் கண்டித்து திருத்தப் பாருங்கள். சுற்றாடலை விரும்பாத படியினால் தீர்மானித்த காணியைக் கைவிடல். தண்ணீர் தத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். சிலருக்கு டெங்கு நோய் பாதிப்பு ஆபத்தினைக் கொண்டு வரலாம். கைலஞ்சம் கோரி சிறைக் கம்பிகளை எண்ணும் நிலைக்குத் தள்ளப்படலாம். உற்சவ காலங்களில் ஆபரணங்கள் திருடர் வசப்படலாம் தடுக்கப்பட்ட விலங்குகளை வேட்டை ஆடுவதினால் சட்டத்தின் பிடியில் அகப்படலாம். பழைய வாகனத்தை புதிது போல் வர்ணந்தீட்டி விற்க முயல்வோரில் எச்சரிக்கையாக இருக்கவும். வெளியூர் பயணமுண்டு.

**துலாம் (சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 2,3)**
ஜென்மத்து வியாழன் நீங்கி விட்டது. இனி ஆனந்தம் தான் போட்ட திட்டம் வெற்றிக்கு மேல் வெற்றியைத்தரும். பல்வேறு காரணங்களினால் இழுபட்ட திருமணம் அந்த மாதிரி கைகூடும்.பங்குத்தொழிலைக் கைவிட்டு தனித்தியங்கப் பாருங்கள். கடன் தொல்லைகள் அகன்று விடும். பொருட்கொள்வனவிற்காக அடிக்கடி உள்ளூர்மற்றும் தென்னிந்தியப்பிரயாணம் ஏற்படும். காதல் மலர்ந்து திருமணத்தில் முற்றுப்பெறும் குழந்தைப்பேற்றுக்காக சிலர் தமிழ் நாட்டு வைத்திய மனைகளுக்குச் செல்வர். நோய் தீர தெய்வத்தலங்களுக்கு விஜயஞ்செய்வர். பெற்றோரின், திதிகளைச் செய்து அதிர்ஷ்டத்தை அனுபவிப்பர். நீண்ட நாட்களுக்குப் பின்னர் சொந்த மனையை அடைவர்.எதிரிகளைக் கண்டும் காணாமல் செல்வதினரல் முரண்பாடுகளிலிருந்து விலகி விடலாம்.

**விருச்சிகம் (விசாகம் 4, அனுசம்,கேட்டை)**
சீதாப்பிராட்டியாரைச் சிறைப்படுத்திய ஜென்ம வியாழன் வருகின்றார். ஆடவர் மற்றும் பெண்கள் பழக்கமில்லாத இடங்களுக்கு புகைப்படக் கருவிகளைக் கொண்டு சென்று ஆபத்தில் சிக்கிவிடாதீர்கள். விடப்பிராணிகளின் தாக்கத்தில் எச்சரிக்கையாக இருங்கள். வாகனங்களின் போட்டோ போட்டி உயிராபத்தைக் கொண்டு வரலாம். புதியன கொள்வனவு செய்யும் வேளை காலாவதி திகதி மற்றும் நம்பகத்தில் கண் வையுங்கள். சிலருக்கு கள்ள நோட்டுக்கள் முலாம் பூசிய ஆபரணங்கள் திணிக்கப்படலாம். முன்பின் அறியாதோரை வீட்டுக்கு எடுக்க வேண்டாம். வாகனசாரதி பத்திரங்களின் காலாவதித் திகதி முடிந்தமை தண்டத்தைக் கொண்டு வரலாம். மாற்றுப்பயிர்செய்கையில் ஈடுபட ஆர்வம் பிறக்கும். சிலருக்கு சிறைக்கதவுகள் திறக்கப்படலாம். பிள்ளைகளின் அழைப்பின் பிரகாரம் தம்பதிகளுக்கு வெளியூர் செல்லும் யோகமுண்டாம். காலச்சர்ப்ப தோஷம் குருசண்டாளதோஷம் நீங்க நாகவிளக்கு எரித்து வழிபட்டு வர திருமணமும் பிள்ளைப்பாக்கியமும் கிட்டும்.

**தனு (முலம் ,பூராடம், உத்தராடம் 1)**
ஏழரைச்சனி நடக்கின்ற உங்களுக்கு இராவணன் முடியை 12 ம் இடத்து வியாழன் வீழ்த்திய துன்ப துயரங்கள் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கையை கைவிட வேண்டாம். சமூகத்தின் வெறுப்பான பார்வைக்கு நீங்கள் ஆட்படலாம். செய்யுந்தொழிலை உயிரினும் மேலாகப்பேணவும். உடையவன் பாராவிட்டால் ஒருமுழம் கட்டை என்பதை மறக்கவேண்டாம். பரீட்சையில் சாதனைபுரிய மாணவர்கள் சகபாடிகளின் உறவை கைவிடுங்கள். வலது குறைந்தவர்களை உங்கள் பிள்ளைகள் போல் ஏற்றிப் போற்றி தேவையான உதவிகளைச் செய்து அவர்களின் அன்பைப்பெறுங்கள். வாஸ்து சோதிட முறையில் மனையைத் தெரிவு செய்து நிர்மாணியுங்கள் பழைய ஒப்பந்தங்கள் இலாபந் தந்தால் புதியதில் மனம் வையுங்கள். இயன்றவரை இரவுப் பயணங்களை கைவிடுங்கள் 7,1/2ச் சனிக்கு சனி விரத வழிபாட்டுடன் ஆஞ்சனேயரையும் வணங்குவதுடன் தெட்சணாமூர்த்திக்கும் அர்ச்சனை வழிபாடு செய்து குருவின் திருவருளைப்பெற்று இன்னல்களைப் போக்குங்கள். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் ஏற்படலாம்.

**மகரம் (உத்தராடம்2,3,4, திருவோணம்,அவிட்டம் 1,2)**
ஏழரைச்சனி நடைபெறும் உங்களுக்குகுருபகவானின் 10ம் இடத்து நிலைப்பாடு நீங்கி 11ம் இடத்துக்கு வந்து மனம் போல இன்ப சுகங்களையும் வெற்றயையும் அள்ளித்தரப் போகின்றார். இதுவரை காலமும் ஏற்பட்ட தடைகள் தாமதங்கள் குறுக்கீடுகள் யாவும் தவிடு பொடியாகி வெற்றிக்கம்பத்தை அடைய வைக்கும் நிலைக்கு வியாழன் உங்களைக் கொண்டு வருவார். சனியின் ஆட்சிவீடாக மகரம் இருப்பது பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போல பிறர் போற்றும் நிலைக்கு உயரப்போகின்றீர்கள.தயக்கமின்றி காலை முன் வையுங்கள். ஏணிப்படிகள் போல படிப்படியான முன்னேற்றம் வந்து கொண்டே இருக்கும். விவாகப்பயணம் வர்த்தகம் குழந்தைபாக்கியம் மனைப்பலன் காதல் போன்றன ஏற்பட்டு வாழ்வில் முன்னேற வைக்க குருபகவானின் அருட்கடாட்சம் உறுதுணையாக இருக்கும்.

**கும்பம் (அவிட்டம்3,4, சதயம்,பூரட்மாதி,1,2,3)**
சிவபெருமானையே மண்டையோட்டிலே பிச்சையேந்த வைத்த குருபகவான் 10ம் இடக்கோரத்திற்கு 4.10.2018 தொடக்கம் ஒருவருடம் வரை வருகின்றார்.தொழிலை மிகக் கவனமாகப் பேணவும் மேலதிகாரிகளுக்கு அள்ளி வைத்து இலாபம் பெற முயற்சிப்பார்கள். வெளியூருக்கு அழைத்துச் சென்ற முகவர் இடை நடுவில் உங்களைத் தவிக்க வைத்து விடலாம். பெற்றோருடன் பிள்ளைகள் முரண்பட்டு, சிலர் மனையை விட்டு வெளியேறியும் விடலாம். பரீட்சை முடிவுகள் பாதகநிலையைக் கொண்டு செல்கையில் பாதுகாப்பில் அதிதீவிர கவனம் எடுங்கள். முதியோர் தனித்து வீட்டில் இருப்பதைக் கைவிடவும்.

**மீனம் (பூரட்டாதி 4, உத்தரட்டாதி,ரேவதி)**
ஆண்டவரே! அட்டமத்து வியாழன் (8)நீங்கியது நொந்து நுாலாய் போயிருக்கும் உங்களுக்கு ஆறுதலாகும். ஒன்பதாம் கோசர நிலையில் இனி வந்துள்ள வியாழன் பல துறைகளிலும் உங்களை ஏற்றி வைக்கப் போகின்றார். ஓடிப்போனவருக்கு ஒன்பதாம் வீட்டு வியாழன் என்பார்கள். வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பினைக் கைவிட வேண்டாம்.பணக் கஷ்டத்தினால் இடை நிறுத்தப்பட்ட திருமணம் மீண்டும் வெற்றியைக் கொண்டு வரும். அரசு தனியார் துறைகளில் வேலை வசதிகளும், பரீட்சைச் சித்தியினால் தொழில் முன்னேற்றமும் ,புலமைப்பரிசிலும் கிட்டலாம். சட்ட விரோத மின்சாரப் பாவனை பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். தடுப்பினின்றும் சிலர் வெளிவருவர். கடமையினின்றும் தவறியவர் என்று சிலருக்கு குற்றம் சுமத்தப்படலாம். ஆண்டவனை மறந்தாலும் பிரயாணத்தின் போது ஆவணங்களை கொண்டு செல்ல மறக்காதீர்கள்.

# நன்றிகள் பொங்கி வழிய...

நசீரா அப்துல் அசீஸ்
52. முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

தைத்திருநாளும் மலர்ந்திட்ட இவ்வேளையில் தையலர்கள் தயாராகிறார்கள் சந்தோசங்களும் சம்பிரதாயங்களும், சடங்குகளும் ஒன்றித்து குடும்ப சமேதரராய் பொங்கல் பண்டிகையைக் கொண்டாட இறைவனால் எமக்களிக்கப்பட்ட வரப்பிரசாதம் சூரியன் முன்னின்று தம் இடுக்கண் இன்னல்களைய வேண்டியும், தம் வாழ்வில் மகிழ்ச்சி தழைக்க வேண்டியும் அவர்கள் கொண்டாடும் இப்பண்டிகை அனைவருக்கும் சந்தோஷத்தை அள்ளி வழங்குகின்றது. ஆமாம் பூமியில் பிறக்கும் மனிதர்கள் எல்லாம் ஒரே குலத்தினர்அவரவர் தத்தமக்கென வகுத்துள்ள பண்டிகைகள், பெருநாட்கள், திருநாட்கள் அவர்களின் குதூகலங்களைக் குறி வைத்து நிற்கின்றது.

ஆனால் இதில் விஷேஷம் என்னவென்றால் அடுத்த வீட்டு ஆயிஷாவும், எதிர்த்த வீட்டு அனோஜாவும் ஒன்றித்து நின்று வசந்தா, விதுஷா, கீதாவுடன் உண்டு மகிழ்வது தான். ஆம்! சமகால விஷேசங்களை சந்தோஷமாக இனமதபேதமற்ற முறையிலே சந்தித்து உரையாடி ஒன்று கூடிக் கொள்தன் தாற்பரியங்களை இவ்விஷேட நாட்கள் உணர்த்தி நிற்பது எமது பழக்கங்களை வழக்கமாக்க வழிகோலுகின்றது.

காரணம் நாம் பிறந்திட்டோம் என்றோ ஒருநாள் மறைந்திட்டோம் என்றபோது அதற்குள் சுயநலக் கொள்கைகளை வளர்த்து நமது இருப்பை நிறைத்து பணமே பெரிது என்று பாவங்களில் வீழ்ந்து தம்மை விட முன்னிப்பாரை வீழ்த்துவதிலே குறியாகி வாழ்ந்து மடிவதால் பயன் எதுவுமில்லை.

வந்தோமா! சென்றோமா என்றில்லாது நல்லதை செய்து நயம்பட வாழ்ந்து பிறந்த பயனை அடைவதில் தான் எம் முனைப்பு முன்னிற்க வேண்டும்.

எனவே நாம் செய்யும் நல்லவைகளில் இல்லாதார் இயலாதோர்களுக்கு முன்னுரிமை கொடுத்து மகிழ்ந்து பிற மதத்தினரையும் அழைத்து சந்தோஷித்துக் கொண்டாடி மனிதநேயத்தையும் சமத்துவத்தையும் நிலைநாட்டி இனமத பேதமற்ற சமுதாயமாக வாழ நாம் வழிகோல வேண்டும். வளரும் சமூக மேம்பாடு உயர வழிவரும். அதனாலே பொங்கலை மங்களமாகக் கொண்டாடி மகிழ




வேண்டும். மற்றோரையும் மகிழ்விக்க வேண்டும்.

பட்டாசு வெடிச்சத்த பரவசத்துடன் பொங்கி வழியும் பாலின் சிரிப்புடன் நன்றிக்கடன் தீர்க்க செய்யும் பொங்கல் தரும் படிப்பினையை ஏற்றுக் கொண்டவர்களாக நன்றி பெருக வாழ வரவேற்போம் இந்நந்நாளை!

*பொங்கலும் புழுங்கலும்*
*அலுங்காமல் நலுங்காமல்*
*தருகிறது நல் ஆசீர்வாதிப்பை!..*

---

# காதல் உண்மையாக இருந்தால் அங்கே உயிர் இருக்கும்

காதல் உயிரினங்களுக்கிடையே ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, அக்கறை கலந்த ஓர் உணர்வு, சேர்ந்து வாழ வேண்டும் என்ற ஆசையாகும். தமிழ் இலக்கியங்களை நற்றினை குறுந்தொகை, கலித்தொகை, ஐந்தொகை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, அகநாநூறு, திருக்குறள் போன்ற நூல்களைப் பார்த்தால் தெரியும் காதலுக்கான ஆதாரங்கள் அவதாரமெடுக்கும்

**ஒருதலைக்காதல் :** தலைவனோ, தலைவியோ ஒருவர் மட்டுமே ஆசைப்படுவதாகும். சொல்லாத காதல் செல்லாது என்பர். சிலர் காதலை வெளிப்படுத்தாமல் காதலிப்பது ஒரு தலைக்காதலின் ஆரம்பமாகும். காதலைச் சொன்னதும் அதை ஏற்றுக் கொள்ளப்படா விட்டாலோ அல்லது சம்மதம் தெரிவிக்காவிட்டாலோ அதன் பின்பும் காதலிப்பது ஒரு தலைக்காதலாகும்.

**காதல் தோல்வி:** காதலிப்பதாக வாக்குறுதி கொடுத்து விட்டு பின்னர் வேறு ஒருவருடன் ஒருத்தியுடன் ஆசை கொள்வது காதல் தோல்விக்குக் காரணமாகின்றது. இதனால் சிலர் தவறான முடிவுகள் எடுப்பதும் தன்னைத்தானே பழிவாங்குவதும் காதல் தோல்வியின் வெளிப்பாடுகள் சிலர் காதல் தோல்வியை பொருட்படுத்தாமல் வைத்த காதலை மதித்து சூழ்நிலையைப் புரிந்து கொண்டு தோல்வியிலும் வெற்றி கொள்கின்றனர். வாழ்க்கையில் மாற்றி யோசிக்க கற்றுக் கொள்கின்றனர்.

காதல் இன்று வியாபாரமாக்கப்படுகின்றது. உலக காதலர் தினம் அனுஷ்டிக்கப்படுவதிலிருந்து திருமணச் சந்தை வரை காதலுக்கு சிலர் விலை பேசுகின்றனர். காதல் ஒரு ஆடம்பரப் பொருளாக மட்டும் பார்க்கிறவர்கள் அது அன்பின் அடையாளம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆசைதான் காதலுக்கு மூலகாரணமாகும்
ஆசை வரும் போது பாசம் வரும்
பாசம் வரும்போது நேசம் வரும்
இந்த நேசங்கள் தான் உலகில் நெஞ்சங்களை மகிழ்விக்கின்றது. காதல் உண்மையாக இருந்தால் அங்கே உயிர் இருக்கும். உயிருக்குள்ளும் அன்பிருக்கும்.

யாழ் களரி
Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்கள்: வே.சஞ்சீவதனுசன் | செ.யோசப்பாலா
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.

# சவால்கள்

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இடம் பெற்ற கொடிய யுத்தம் அதன் தாக்கங்கள் பூசி மெழுகப்பட்ட நிலையே தொடர்கின்றது. உள் மனக் காயங்கள் பார்க்கும் இடமெல்லாம் சமூக ஆர்வலர்களால் கூர்ந்து வெளிக்காட்டப் பட்டுக் கொண்டிருக்கின்றது. சமூக தட்டுக்கள் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் தடைப்பட்டுப் போயிருந்த யுத்த காலத்திலிருந்து திடீரென திறந்து விடப்பட்ட புதிய சூழல், புதிய சமூக படிக்கட்டு அமைப்பு உருவாகிய சமாதான காலம் வரை ஆராய்ந்து பார்க்கின்றபோது புதிய அமைப்பில் முன்னைய மரபுகளும் விழுமியங்களும் தடுமாற்றம் பெற்றுள்ளதால் ஏற்கனவே நிலவியிருந்த மரபுகள், நியமங்கள், தரங்கள், விழுமியங்கள் தொடர்பான உண்மையான அர்த்தங்களை சரியான பாதையை அடுத்த பரம்பரைக்கு வழங்கக் கூடிய மூத்த பரம்பரையினரின் செல்வாக்கு இல்லாது போய்க் கொண்டிருக்கின்றது.

சாதாரண காலத்தின் இயல்பான மாற்றமொன்றின் ஊடாக இவைகள் புதுப்பிக்கப்படாமல் புதியனவற்றை அப்படியே பிரதி எடுத்துக் கொள்ளுகின்ற போக்கு உருவாக்கியுள்ளது. சமூகப் பொறுப்புள்ள நிறுவன முறைகள் அதாவது நிறுவப்பட்ட சிந்தனைமுறை பாரம்பரியங்கள் போன்றன வலுவிழந்துள்ளது.. யுத்தம் திணித்த அதிர்ச்சியிலிருந்து எவை எவற்றை இழந்துள்ளோம் என்பதைக் கூட இனம் கண்டு கொள்ள முடியாமல் சமூகம் திணறிப் போயுள்ளது. இதனால் சந்தர்ப்பத்திற்குத் தக்க நடைமுறையை ஏற்றுக் கொள்ள மனங்கள் பழக்கப்பட்டு அதுவே வழமையாகி விட்டது. யுத்தம் மட்டுமே முடிவு பெற்றது. முடிவு பெற்ற பத்து வருட காலப் பகுதியிலும் கண்ணுக்குத் தெரியாத சமாதான காலத்து யுத்தங்கள் தொடர்கதையாகிப் போயுள்ளது.

உள்ளூர் உற்பத்தியைப் பொறுத்தவரை விவசாயத்தைத் தவிர ஏனைய உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் சிறிது சிறிதாக மறைந்து போவதற்குக் காரணம் புதிய தொழில்நுட்பத்தோடு போட்டியிட முடியாத உள்ளூர் உற்பத்தியாளர்கள் வேறு வழிகளை நாட வேண்டியள்ளது.

இந்நிலையில் வெளிநாட்டுப் பணவரவு நுகர்வுப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கின்றது. மேலதிகப் பணம் பல்கிப் பெருகியுள்ள வங்கிகளின் ஊடாக சேமிப்பாகத் திரட்டப்பட்டு தலைநகருக்கு அனுப்பப் படுகிறது. யுத்தத்திற்கு முன்னர் கிராமிய மக்களின் கட்டுப்பாட்டிலிருந்த பொருளாதாரம் தற்போது அவர்களின் கையை விட்டு நீங்கியுள்ளது.உற்பத்தித்திறன் கொண்ட கடல் பகுதி வளங்களும் நிலப்பகுதி வளங்களும் மரபு வழியாக உபயோகித்து வந்தவர் களின் கைகளிலிருந்து விலகிக் கொண்டு வருகின்றது. தொலைத்தொடர்பு, பெருந்தெருக்கள் வசதிகளை பெரிதாக்கி வருகின்றோம். இவை தான் தனித்து இயங்கிய கிராமியப் பொருளாதாரங்களை தங்கி வாழும் பொருளாதாரங்களாக மாற்றி வருகின்றன. கல்வி இளைய தலைமுறையை உத்தியோக வாய்ப்புக்களை நோக்கி திசை திருப்பியுள்ளதால் உத்தியோகத்துக்கான கல்வி தான் நடக்கிறது உற்பத்திக்கான கல்வி இல்லாமல் போகின்றது.

ஆனால் திணிக்கப்பட்ட வறுமையும் புதியவகை நோய்களின் பரம்பலும் உறுதியாகத் தொடர்கின்றன. சமூகத்தில் நலிவடைந்த வர்க்கமாக விதவைகள், அனாதைகள், அங்கவீனர்கள், முதியோர் என்ற பிரிவினர் போதிய சமூகப் பாதுகாப்பின்றி கைவிடப்பட்டுள்ளனர்.யுத்தச் சூழ்நிலைகளில் மனோநிலை பாதிக்கப்பட்ட பெற்றோர், குழந்தைகள் ஒருபுறம் உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் வலுவிழக்கப்பட்டு சமூகத்தில் சேர்ந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டியுள்ளது.

அதிகார மையங்கள் சாதாரண மக்களின் அணுகும் ஆற்றலுக்கு அப்பால் சென்றுள்ளது. புதிய சவால்களுக்கு உள்ளூரிலேயே பொருத்தமான தீர்வுகளைக் காணாமையால் உள்ளூர் அமைப்புக்கள் வலுவிழந்து போயுள்ளன. மரபு ரீதியான முறைமைகளையும் அறிவுத் தொடர்ச்சிகளையும் பேணி வந்த நிறுவனங்கள் அறவே அற்றுப் போயுள்ளது. இதனால் உண்மையான புத்திஜீவிகளுக்கு இடமில்லாதபோது போலிப் புத்திஜீவிகள் மேலாதிக்கம் பெற்றுள்ளனர். பொருத்தமற்ற எதிர்மறையான விளைவுகள் கொண்டுவரக்கூடிய சமூகப் பொருளாதார அரசியல் நடைமுறைகள் பெரும் வேகமாக உள் நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இவற்றை உரிய வகையில் எதிர் கொண்டு எமக்குப் பொருத்தமான முறைமைகளையும், சூழ்நிலைகளையும் உருவாக்குவதே இன்றைய உள்ளூர் ஆளுகையாளர்களின் பிரதான செயலாக வேண்டும்.

# விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ்மக்கள் 6

## உரிமை கேட்கும் உரிமை அற்ற தமிழர்கள் -10

பரமபுத்திரன்

அடுத்து அன்றைய சண்டியர்கள். சண்டியர்கள் தொடர்பான பெயர்கள் எதையும் நான் குறிப்பிட விரும்பவில்லை. காரணம் அவர்கள் வரலாற்று நாயகர்கள் அல்ல. மக்களை வருத்திய மனசாட்சி இல்லாத மனிதர்கள்.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை யாழ்நகர்,அத்தியடி,ஆனைக்கோட்டை,சுண்ணாகம்,கீரிமலை,சங்கானை, இப்படியே மறுவளமாக பரந்தன், கிளிநொச்சி என்று எல்லா இடமும் அவர்களின் பெருக்கம். இன்னும் பல ஊர்சண்டியர்கள் இருந்தனர். அவர்களை எதிர்த்து பேசமுடியாது. அவர்களுக்கு பயந்துதான் வாழவேண்டும். காவல்துறைக்கு அவர்கள் செல்லப்பிள்ளைகள். அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க காவல்துறைக்கு போனால் மீண்டும் அடிவேண்டும் நபராக போனவர்தான் அமைவார். எனவே அவர்களை எதுவும் செய்யமுடியாது. இந்நிலையில் இயக்கங்களின் தோற்றம் சந்திச்சண்டித்தனங்களுக்கு எதிராக துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டது. குற்றம் செய்வோருக்கு அதி குறைந்த, மற்றும் அதி உயர்ந்த தண்டனை துப்பாக்கிச்சூடு என்ற நிலை வந்ததால் சண்டியர்கள் பயம் கொள்ள ஆரம்பித்தனர். சண்டித்தனங்கள் ஒழிந்தன. அதிலும் மக்களுக்கு விடுதலை கிடைத்தது.

களவுகள் நடைபெற்ற காலம் அது. திருடர்கள் தொடர்பாகவும் விடுதலை அமைப்புகளின் தங்கள் கவனத்தை திருப்பின. திருட்டில் ஈடுபடுவதாக பலர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். பொருளாதார சுமையும், பணத்தின் மேலுள்ள ஆசையும் மக்கள் திருடர்களை வெறுக்க காரணமாக இருந்தது. வாழ்வின் தேவைகள், பணம் வைத்துள்ளோர் மீதுள்ள வெறுப்பு, பழகிவிட்ட தொழில், சுலபமான தொழில் என்பதால் திருடர்கள் களவு செய்ய விரும்பினர். இதனால் யாரும் கேள்விகள் கேட்கவில்லை. எனவே சுட்டுக்கொல்லுதல் தொடர்ந்தது. சிறிய களவுகள் செய்தோரும் கொல்லப்பட்டது கவலைக்குரியதுதான். ஆனால் மக்கள் பயமின்றி வாழும் ஒரு சுமூக நிலையுருவாகியது. இரவில் கூட விடுதலை அமைப்புகளை சேர்ந்தவர்கள் வீதிகளில் திரிந்ததால் குற்றங்கள் குறைந்தன. குற்றங்கள் செய்ய மக்கள் அஞ்சினர். எனவே பயந்து வாழும் நிலையிலிருந்து மீண்டு விடுதலையுடன் வாழக்கூடிய நிலை வரத்தொடங்கியதும் மக்களின் விருப்பத்துக்குரியவர்களாக விடுதலை அமைப்புகள் நிலைபெறத்தொடங்கினர்.

அடுத்து அரச தொழிலாளர்கள். மக்கள், பொது வேலைகளில் ஈடுபடுவோர்களை பொறுத்தவரை . அன்றும் சரி இன்றும் சரிஇ தமிழ் மக்கள் மத்தியில் தொழிலாற்றும் அரச ஊழியர்கள், தாங்கள் தான் பெரியவர்கள் என்ற முடியை தமக்கு தாமே சூட்டிக் கொண்டே வாழ்கின்றனர். இதற்குள் சாதிச்சிக்கல்களும் அடங்கும். சிலர் சிங்கள அரசஊழியர்கள் பெருமளவில் உதவும் போக்கில் இருப்பார்கள். அவர்களை பொறுத்தவரை தமிழர்களின் சாதி மதம் தொடர்பாக சிந்திக்கமாட்டார்கள். அதுவரை காலமும் தங்களை பெரியவர்களாக எண்ணிய அரச ஊழியர்கள் இயக்கங்களின் வருகையின் பின் தங்களது வேலைகளை சரியாக செய்யவும், மக்களை அனுசரித்து நடக்கவும் பழகிக்கொண்டார்கள். சாதி,இன, மத அடிப்படையில் வேறுபாடுகள் காட்டமாட்டார்கள். இந்த நடைமுறை மாற்றங்கள் மக்களிடையே நல்ல நம்பிக்கையான எதிர்காலம் தமிழனுக்கு வரும் என்ற புதிய எண்ணத்தை தோற்றுவித்தது. மக்கள் அமைதியாக வாழமுடியும் என்பது மட்டுமல்ல தங்களது சிக்கல்களை தீர்த்துவைக்க தங்கள் பிள்ளைகளே வந்து விட்டார்கள் என்கின்ற மிடுக்கும் வந்துவிட்டது. தப்பு செய்பவர்கள் உயிர்வாழமுடியாது என்று நிலைமை மாறியதால் பெண்கள் கூட இரவு பகல் என்று பாராது ஊருக்குள் நடமாட தொடங்கிவிட்டார்கள். எல்லோரது பாதுகாப்பும் விடுதலை அமைப்புகளுக்கு பொறுப்பானது. பெண்களுக்கு ஏதாவது சிக்கல்களை தருபவர்கள் அதி உயர் தண்டனைக்கு உள்ளாகும் நிலையில் இருந்தது. இது மக்கள் மத்தியில் விடுதலை அமைப்புகள் தொடர்பாக நல்லதொரு நம்பிக்கைநிலை தோன்ற வழிவகுத்தது எனலாம். இதற்கு நான் சிறப்பாக ஒரு உதாரணம் சொல்வதாயின், இவ்வாறான காலகட்டத்தில் நான் தொழில் நிமித்தம் வேறு ஊரில் இருந்தேன். வாரம் ஒருமுறை அல்லது இருவாரத்திற்கு ஒரு முறை ஊருக்கு செல்வேன். எனது நண்பர்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருந்தார்கள் என்பது மட்டுமல்ல, ஒவ்வொருவர் ஒவ்வொரு விடுதலை அமைப்பினை சேர்ந்தவர்களாக இருப்பார்கள். இப்படியான ஒரு அருமையான சூழல் நிலவியதை எல்லோரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

யாழ் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா சுடப்பட்டமை மற்றும் காவல்துறை சார்பான பசுதியாம்பிள்ளை,சண்முகநாதன்,பேரம்பலம்,பாலசிங்கம், குமார், குருசாமி போன்றோர்களின் அழிப்பு, அரசுக்கு ஆதரவுதரும் தலைவர்களிடமும், தமிழ் மக்களின் மீது பாதிப்புகளை ஏற்படுத்தும் தமிழர்களிடமும், அச்சத்தை உருவாக்கியிருந்தது. மேலும் காவல்துறைமுடக்கம், ஏனைய தமிழ்மக்கள் மீதான பாதகமான விளைவுகள் என்பனவும் தடுக்கப்பட்டன.

( தொடரும்)

# துயர் துடைக்கும் பணியில் இளையோர் சக்தி முன் உதாரணமானது

கைகொடுக்கும் கரங்கள் ஒன்று இணைந்தால் கவலையோடு வாழும் உள்ளங்கள் வாழ்வு மலரும் என்பதற்கு இன்றைய இளையோர் தாமாக முன்வந்து எடுத்துவரும் முயற்சி காட்டாறு வெள்ள அனர்த்தங்களில் சிக்குண்ட மக்களின் துயர் துடைக்கும் பணிகளால் ஆறுதல் அடைந்தனர்.


இளையோர் சக்தி எதிர்காலத்தில் ஒன்றிணைந்து செயற்பட்டால் சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியும். அதற்கான முன்முயற்சிகள் மக்களுக்காக உதவும் மனங்களின் நோக்கம் எதுவும் உரியவர்களுக்கு சென்றடைய வாய்ப்புக்கள் உண்டு.

முன்பு சுனாமி காலமும் இது போன்ற எழுச்சி மிக்கவர்களின் செயல்களில் பல இடையூறுகள், தடைகள், தடுமாற்றங்கள், பல சுரண்டல்காரருக்கு வழி சமைத்ததே அனுபவமாகும். ஒன்று சேர்ந்து நல்ல காரியங்களில் இணைந்தாலே உண்மையானவர் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். இதற்கு இனிவரும் காலமும் முக்கியமானது. அவசர அரச திட்டமிடல் செயல்பாடுகளில் கண்காணிப்பும் சென்று சேர வேண்டியவற்றை தீர்மானிக்கும் இளையோர் சக்தியாக மாற தூரநோக்கான திட்டமிடலை ஏற்படுத்தினாலே தான் மக்கள் உதவிகள் சுரண்டப்படாமல் பாதுகாக்கலாம். இதனை எவரும் நேரடியாக இளையோரை இணைப்பார்கள் என எதிர்பார்த்து ஏமாறாது இளையோரே விழிப்புடன் த்கள் பகுதி மேம்பாட்டுக்கான செயல்களை இனம் காண்பதும், உள்நுழைந்து செயற்படுவதும் காலத்தின் கட்டாயம். சிறுதுளி பெரு வெள்ளமாவது போல் போல் இளையோர் சக்தி ஒன்றிணையும் திட்டங்கள் நடைமுறைப்படுத்த ஒன்றிணையுங்கள்.




நிவாரணங்கள் பகிர்வதாகக் கூறி பிரதான வீதிகளுடன் நின்றுபத்திரிகை படத்துக்கு முகம் கொடுப்போராக அனைவரையும் சுரண்டிடெ வாழ பொய் முகங்கள் நடமாடுவதையும் கண் காணித்தல் வேண்டும். ஒரே ஆட்கள் உதவி பெற உள்ளிருப்போர் எதுவுமின்றி ஏமாற்றமடைவது நடைபெறுவது கவனிக்க வேண்டியதும் இளையோர் ஊரின் ஒன்றிணைவதற்கு தடையானவற்றை இனம் கண்டு கொள்ளுங்கள், தினம் தினம் இரண்டு மூன்று பேருடன் வீடு புகுந்து கொள்ளைகள் நடைபெறுகின்றது. காவலாளி இல்லாத முதுமைகளின் முனங்கல்கள் தூக்கமின்றி ஏக்கத்துடன் பலவற்றை இழந்தும் வெளியில் சொல்ல முடியவில்லை. காவலகங்கள் இன்றும் பயப்பிராந்தியை ஏற்படுத்துகிறதே அன்றி எவரையும் கைது செய்து வெளிப்படுத்துவதாக இல்லை. இதை விட ஒரு சில கள்ளருக்கு மாத வருமானம் பெறும் சட்டத்தரணிகளும், காவலரும் துணை போவதான சந்தேகம் மக்களின் தயக்கந்தான் காரணமாவதால் இளையோர் ஒன்றிணைந்து காப்பரண்கள் அமைத்து தங்கள் பகுதியில் ஏற்படும் சுரண்டல், கொள்ளை, கொலைகளுக்கு விடை காண வேண்டியதும் மக்கள் விழிப்பூட்ட வேண்டியதாக பொறுப்புள்ளோரின் காலத்தின் பொறுப்பாகும்.
















## சிறுவர் மனப்பதிவுகள்












# கவி நிலம்

### இனிய தமிழ் பொங்கல்

பொங்கல் என்றால் தைத்திங்கள் முதல் நாள்
புதவரவை எதிர் பார்க்கும் பொன்னாள்
திங்கள் எல்லாம் சிறப்புற தொடர்ந்திட
திருவருளை வேண்டி நிற்கும் திருநாள்
மங்களங்கள் வாழ்வில் என்றும் நிறைந்திட
மகிழ்வோடு தமிழரெல்லாம் கொண்டாடும்
சங்கமமாய் தமிழரெல்லாம் இணைகின்ற பொங்கல்
எங்கும் இனிக்கும் இனியதமிழ்ப் பொங்கல்

கடந்த வருத்தின் கசப்பெல்லாம் மறந்து
தைமைகளை வரவேற்கும் பண்பாடே பொங்கல்
திடமுடனே புத்தான்டை மகிழ்வோடு தொடர்ந்திட
தெய்வத்தின் ஆசிகள் பெற்றிடும் தைப்பொங்கல்
தடைகள் எல்லாம் தாண்டி பூமித்தாய்
தந்திடும் விளைவுக்காய் வைப்போம் பொங்கல்
கடமை உணர்வுடனே தமிழ்கட்சிகள் இனைந்திட
கடவுள் துனை வேண்டி பொங்கிடுவோம் பொங்கல்

### அழிந்திடாதெம் தமிழ்மொழி

ஏடாய்ந்து கற்பவர்க்கு
இனிக்கு மெம் தமிழ் மொழி
பாடறிந்து கற்பவரை
படியுமார்த்தும் தமிழ் மொழி
கேடறிந்து காப்பவரை
சீருயர்த்தும் செம்மொழி
மூடரையும் சீடராக்கும்
முத்தான தமிழ் மொழி

சித்தரும் கக்தரும்
வணங்கிய தேன் மொழி
முத்திக்கு வழி சொன்ன
மூலமுதலான முது மொழி
சக்தி சிவனார் அருளிய
சாகத் தமிழ் மொழி
எத்தடை வரினும்
என்றும் அழிந்திடாதெம்
இனிய செந் தமிழ் மொழி

### விதியோ ?

காலாதி காலங்களாய்
இயலாதவர் என்றெண்ணி
மோஸதிக்கம் செய்து
தீட்டிய திட்டங்கள்
முட்டி மோதவைத்து
சாட்டைகளாய் மாறி
வாட்டி வதைத்து
சாரிணறமுளஞ்சறுக்கும்
சாணக்கிய ஆளகையால்
வீணாய்ப் போனவர்கள்
குண்டுச் சட்டிக்குள்ளே
குதிரை ஓட்டுவோருக்கு
மூண்டு கொடுத்து
கண்டது ஏதுமில்லையே
சிக்கலில் மாட்டிக்கொண்டு
சிவசிவா என்றமைத்து
பக்குவமில்லாது போல
பயனொத்தும் இல்லை
யென்றதால்
எக்கணம் வாழ்வு கிட்டும்
பொக்கணம் கட்டிக் கொண்டு
போவதுதான் விதியோ ?

### காதலர் தினம் தேவை

வண்ணமலர்த் தேனருந்தா வண்டுகள் இல்லை
வடிவழகை இரசிக்காத மாணிடர் இல்லை
பென்மையிடம் மயங்காத ஆண்மையும் இல்லை
ஆண்மையிடம் மயங்காத பெண்மையும் இல்லை
கண்ணுக்கு இமைபோல கருத்துக்க இசை போல
காதல் கொள்ளாத வாழ்க்கையே இல்லை
மண்ணில் பிறந்தவரின் மகிழ்வே காதல்
கண்ணியம் போற்றிட காதலர் தினம் தேவை

# அபீர்ராஜனின் கவிதைகள்

### கறிவேப்பிலையா ?

உண்ணும் உணவது
சுவைக்க வேணுமென்று
உள்ளே போடுவதும்
சுசக்கிறது என்றே
எடுத்து எறிந்திடவும்
கறிவேப்பிலையா?
தமிழரின் ஆதரவு?

அவைக்கு பலம் சேர்க்க
அரவணைப்பாய் நடித்து
அவையின் பின்னர்
அவைதான் ஆழ்வரென்பது
இவைகளுக்கேன் விளங்கவில்லை?
இனியும் இந்நிலைதானோ?

### பொங்கட்டும் மங்களம்

சூரியச்சிரிப்பின்
காரியச்சித்தியில்
கதிரவன் வரவு
நல்வரவாக வலம் வரட்டும்

காரியரும் கணவர்களும்
இளையோரும் முதியோரும்
புத்தாடை அணிந்து
புதமணம் கமழ
பூச்சூடி ஒன்றித்து
குதுகலிக்கும் நாள் இதுவாகட்டும்

கடும் மழை குறைக்க
கற்கண்டு படைத்து
இன்னல் பல போக்க
கன்னல் வெட்டி வைத்து

துக்கம் அனைத்தும் நீங்க
முக்கனிகள் சேர்த்து
வெள்ளம் வராதிருக்க
வெல்லம் சேர்த்து பொங்கி மகிழட்டும்

நல் எண்ணமும் செயலும்
விளைச்சலாக விளைய
கடமையும் கண்ணியமும்
கட்டுப்பாட்டுடன் அமைய
அனைவரும் பொங்கலிட்டு
புதுவழிபிறக்க வாழட்டும்

என்றும் மனையதுவும் சிறந்து
வாழ்வதும் செழித்து
குடும்ப குதூகலங்கள் மிகைத்து
மங்களம் பொங்கி வழியட்டும்
என்றே வரவேற்போம் வாழ்துவோம்

- நசீரா அப்துல் அஸீஸ் -

## யாழ்களரியின் குறும்பட போட்டி

உங்கள் கைகளில் உள்ள தொலைபேசியைக் கொண்டே உங்கள் நண்பர்களுடன் இணைந்து சமூக விழிப்பூட்டலை ஏற்படுத்தும் குறும்படங்களை தயாரித்து உங்கள் திறமையை வெளிப்படுத்தலாம்.

சிறந்த குறும்படம் – 3முதல் 5 நிமிடங்களுக்குள்

சிறந்த குறும்படம் – **(விண்ணப்பங்கள் 10.02.2019 முன்)**

குறும்படம் சமர்ப்பிக்க **10.04.2019)**

சிறந்த கதையமைப்பு, சிறந்த நடிப்புக்கு சிறப்பான பரிசில்களை உங்களதாக்குங்கள்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## இன ஐக்கியம்.......

மதங்கள் பலவாயினும் மக்களை உளநல ரீதியான ஐக்கியப்படுத்துதலும் சகவாழ்வின் பெறுமானத்தை உணர்த்தித் தர்ம சிந்தனையையும் வளர்த்து ஆன்மீக ரீதியில் ஒன்று படச் செய்து கொள்வதே அடிப்படை நோக்கமாக இருத்தல் வேண்டும். அனைத்து மதங்களும் ஈற்றில் மோட்ச சாம்ராஜ்ய நோக்கத்தையே வலியுறுத்துகிறது. ஒரு நகரத்தை அடைவதற்குப் பல பாதைகள் உள்ளது போல மதங்கள் அனைத்தும் ஆன்மீக ரீதியில் சேருமிடம் ஒன்றாகவே காணப்படுகின்றது. ஒரு பாதை தூரமானதாகவும் இன்னொரு பாதை கிட்டியதாகவும் காணப்படுவது போன்றே மதங்கள் கடைப்பிடிக்கும் வழிமுறைகளும் வேறுபடலாம். அனைத்து மக்களது உள்ளத்தையும் வளப்படுத்தி வக்கிரங்களைக் களைந்து காம, குரோத, மோக, மத காரிங்களை நீக்குவதே மதங்களின் அடிப்படை நோக்கமாகும். ஆசைகள் வகுத்து விட்டதும், ஆணவமும், இறுமாப்பும், மேலோங்கி மக்களிடையே குரோதமனப்பான்மையை உண்டு பண்ணி விடுகின்றது. இதன் காரணமாகவே இன ஐக்கியம் சிதைந்து பல பின்விளைவுகளை ஏற்படுத்தி விடுவதுடன் அழிவின் விளிம்பிற்கு மக்களைக் கொண்டு செல்கிறது.

இந்த வகையில் ஐக்கிய இலங்கைக்குள் நிரந்தர சமாதானத்தை அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு அரசியல் மதம் சார்ந்ததாக இல்லாமலும் மதங்கள் அரசியல் சார்ந்ததாகவும் இல்லாமல் தனித்து அரசியல் சுதந்திரமும், மத சுதந்திரமும் வேறு வேறாக செயற்படுத்துதல் அவசியமாகும். அரசியலும், மதமும் ஒன்றையொன்று சார்ந்ததாக இருப்பின் ஒருபோதும் இன ஐக்கியத்தை ஏற்படுத்துவது முடியாத விடயமாகவே காணப்படும். மக்கள் ஒவ்வொரு மத விழுமியங்களையும் அறிந்து கொள்வதும் அனைத்து மதங்களினதும் நிகழ்வுகளில் பங்கெடுத்தலும் இன ஐக்கியத்தை ஏற்படுத்தும். எல்லா மதங்களும் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த வகையில் நாம் ஒன்று பட்டு இன ஐக்கியத்தை ஏற்படுத்துவோமென இன்றைய புதுவருடத்தில் திடசங்கற்பம் பூணுவோமாக.

"சர்வ ஜநகா சுகினோ பவந்து"

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## ஐக்கிய இல.......

இஸ்லாம். அபிவிருத்தியானது அனைவர் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதாக இருப்பது வேண்டிய அடிப்படைகள் அத்தியாவசியங்கள் , அவசரங்கள் கூட வகுத்து கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்துக்குமாக அரசியல் சமூக, சமய, பொருளாதார விவகாரங்களுக்கு பொறுப்பாக ஒருவரை தெரிவு செய்யும்போது இறையச்சம் மேலோங்கும் ஒருவரே தெரிவு செய்யப்படின் அங்கே சாந்தி, சமாதானம், நீதி, நேர்மை, நடுநிலை கொள்வதால் அபிவிருத்தி தக்க வைக்கப்படும். ஓர் ஐக்கிய இலங்கையும் ஐக்கியமாக்கப்படும்.
இதை விடுத்து ஆட்பலம், பணப்பலம், செல்வாக்குப்பலம் என்று சொல் வாக்கில் சத்தமின்றி செல்வாக்குச் செலுத்த முனையும் போது தான் அழகாக கட்டப்பட்டிருந்த ஐக்கியக்கட்டிடம் ஆட்டம் காணத் தொடங்குகின்றது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## ஆட்சிக்காக ....

காணப்படுகின்றது. இது நல்லிணக்கத்திற்கு சாதகமான பாதையாக இருக்கின்றது. அனைத்து மதத் தலைவர்களும் சொல்லியது போன்று கருணை காட்ட வேண்டும் என்று மிருகங்களையும் நண்பர்களாகக் கருத வேண்டும் என்று பௌத்தம் கூறுகிறது. தேர்தல் காலப் பேச்சுக்கள் ஆட்சியமைப்பதற்கு பேசுவதாக இராமல் உண்மையான அபிவிருத்திக்கும் நிரந்தர சமாதானத்தையும் கொண்டு வருவதாக அமைய வேண்டும்.

# மனிதப் புதைகுழியைப் போல கால்நடை அழிவும் கணக்கிட முடியாது போகலாம்

திரு.ஓலுமடு ஜெயக்குமார்
நானாட்டான், மன்னார்



வாய்பேசா ஜீவன்களின் நிலை பற்றி யார் அக்கறை கொள்வார்கள், அதை நினைச்சுத் தான் நாங்க பெரும் கவலைப்படுகிறோம். அ ப்படி என்ன கவலை என்கிறீர்களா? மாடு மேய்த்து காட்டு வழியே பல மிருகங்கள் நடமாடும் சூழலில் மடுகோவில் பாதை நடுவே சந்தித்த அந்த மனிதநேயம் மிக்க அவரது கருத்துக்கள் பற்றி யாரும் கவனம் செலுத்துவார்களா? சகல மாவட்டங்களுக்கும் தேவையான மிருகங்களுக்கான மேய்ச்சல் தறை பற்றி கால்நடை வளர்ப்போரின் கவலை தங்கள் குடும்பத்தை விட தாங்கள் வளர்க்கும் கால்நடைகள் பற்றிய அக்கறை அரச நிறுவனங்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் மட்டத்தில் கூடிய அக்கறை செலுத்தாவிட்டால் அதன் பாதிப்பு மனிதர்களின் வாழ்வியலில் பல வித பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதனை தூரநோக்கோடு கூறினார். மேய்ச்சல் நிலம் இல்லாததால் விவசாயப்பயிர்கள் பாதுகாப்புக்காக கால்நடைகளை காட்டிலே வளர்க்கும் நிலை. மேய்ச்சலுக்கு அழைத்து வெளியே சென்று வர தற்போது பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறிக் கொண்டு சென்று மேய்ச்சலை பகிர முடியாத சூழல். இதை விட காட்டிற்குள் உணவின்றி வாடும் கால்நடைகள் என்னிடம் 70 கால்நடை வரை இருந்த போதும் ஒரு மாட்டிலும் பால் கறப்பதில்லை. காரணம் உணவின்றி பால் கன்றுக்குக் கூடப் போகாதபோது அதிலிருந்து நாம் எடுத்துக் குடிப்பது விற்பது மனசுக்குப் பொறுக்காத விடயம். அதனால் அதனைப் பாதுகாத்து மிருகங்களிடமிருந்தும் அயல் கிராமங்களிலும் இருந்து வரும் கள்வர்கள் தொல்லை தாங்க முடியவில்லை. அதனால் எமது குடும்பத்தை விட்டு இரவுக்காவல் காக்கும் நிலையால் எங்கள் குடும்பத்தையும் கவனிப்பது மிகக் கடினமாக உள்ளது. அங்கும் கள்வர்கள் தொல்லை எதுவித பாதகாப்புக்கும் யாருமில்லை. களவு போனபின் அரச அதிகாரிகளிடம் அலைந்து என்ன பயன்? யாரையும் கைது செய்வது மிக அரிதாகி வருகிறது. இதனால் இவ்வளர்ப்பில் நாட்டம் அற்றுப் போகிறது. சங்கங்கள், அமைப்புக்கள், அதிகாரிகள் கூட்டாகத் திட்டமிட்டால் இதற்கான மாவட்ட, பிரதேசமட்ட திட்டங்கள் எல்லாம் பெயரளவில் இருப்பதை விட செயல்பட முன்வருவார்கள் எனில் கால்நடைகளினால் அதிக பயனைப் பெறலாம் இதனை விரைவாக செயல்படுத்தா விடில் இதன் எதிர்காலம் இருள் சூழ்ந்தே காணப்படுகிறது.

நற்பணி சாதனையாளர் விருது"2019"

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த இளையோர் மற்றும் சமூகசேவை ஆர்வலர்களே!
உங்களை சாதனையாளர்களாக உருவாக்கி
"வடக்கின் சாதனையாளர் நற் பணி விருது"
"கிழக்கின் சாதனையாளர் நற்பணி விருது"
என்ற பிரிவுகளில் 10,000 ரூபா பணப்பரிசும், நினைவுக் கேடயமும்.

077-6510375

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1, ஏ.வி வீதி, கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.

# வலிசுமந்த நினைவுகள் பதிவாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்

திரு.யோன்சன் இராஜ்குமார்
பிரதி இயக்நர், திருமறைக்கலாமன்றம்



எமது வலிசுமந்த நினைவுகள் பதிவாக்கப்படாதது எமது வரலாற்றுப் பதிவுகளைத் தொலைத்தவர்களாகப் போவரைத காலாகாலம் நடந்தேறுவதால் கடந்து வந்த காலத்தை மறந்தவையாக, மறைக்கப்பட்டவையாக மாறுவது மிகவும் கவலை அளிக்கின்ற விடயமாகும். வலிகளைக் கடந்து வந்தவர்களும், மன வடுக்கள், வலிகளை பதிவுகளை மறந்து வாழ்வது வரலாற்றுத் தவறாகிவிடும். இதனைத் தூரநோக்குடன் சிந்திக்க வைக்கும் அருட்சகோதரி எலிசபேத் அவர்களின் "காலக்குரல்" நூல் கவிதை வரிகள் எவரையும் துன்புறுத்தாத வன்சொல் இன்றிய பதிவுகள் அக்காலத்திற்கு எங்கள் சிந்தனைகளை மீட்டுப் பார்க்க வைத்தமைக்குப் பாராட்டுகின்றேன். ஊக்கமூட்டி வெளியீட்டினை 200வது ஆண்டு சபையின் பதிவாக்கிய திருக்குடும்ப கன்னியர்சபையின் முயற்சிக்கள் பாராட்டத்தக்கது.

திருக்குடும்ப கன்னியர் சபையின் 200வது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் அருட்சகோதரி எலிசபேத் அந்தோனிமுத்து அவர்களின் "காலத்தின் குரல்" கவிதை நூல் வெளியீடு மாகாணத்தலைவி பிரதம விருந்தினராகக் கலந்து வெளியீட்டு உரையினை திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குனர்யோன்சன் இராஜ்குமார் அவர்களும், ஆய்வுரையினை உளவியல் திட்ட இணைப்பாளர் திரு.அ.அஜந்தன் நடாத்த சிறப்பு விருந்தினராக அச்சுவேலி பங்குத்தந்தை C.G. ஜெயக்குமார் அடிகளாரும், கலாபூஷணம் செ.யோசெப்பாலா அவர்களுடன் அருட்சகோதரிகள், அருட் தந்தையர்கள் பங்குபற்றிய நிகழ்வில் நூலாசிரியர் அருட்சகோதரி எலிசபேத் அவர்களைக் கௌரவித்து மாகாணத்தலைவி அவர்களால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து மகிழ்வித்தார். பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை மாணவிகளின் நடனம் சிறப்பிக்க மாகாண இல்ல மண்டபம் மகிழ்வில் நிறைந்திருந்தது.




குருநகர் சென்றோக் மகளிர்கழகம் முதியோர்சங்கம் இணைந்து நடாத்திய பொங்கல் விழாவில்



பிரித்தானியாவில் வசிக்கும் றமேஸ் ஆதீரனின் முதலாவது பிறந்த தினத்தை முன்னிட்டு பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு யாழ்களரி ஊடாக புத்தகப் பைகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி புத்தகப் பைகள் இரண்டு கால்களையும் இழந்த முன்னாள்போராளியான திரு.இராசேந்திரன் அவர்களால் தயாரித்து யாழ்களரியால் பெறப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது













இரண்டு கால்களையுமிழந்த முன்னாள் போராளியின் சுயதொழிலை மேம்படுத்த, வறிய மாணவர்களுக்கான புத்தகப் பைகளை அன்பளிப்பாக வழங்க விரும்புவோர் இவருடன் தொடர்பு கொள்ளலாம்.

(கிளிநொச்சி மத்திய சந்தை)

திரு.இராசேந்திரம் 077–5288768

யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாச்சார அதிகாரசபை
உத்தியோகத்தர் பிரியாவிடை வைபவமும்,
வரவேற்பு வைபவமும்






யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற கால்கோள் விழாவில் ஆளுநர் சுரேன் ராகவன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினார்





## வாசகர் கருத்து





THE EDITOR SIR,

யாழ் களரி

077 6179027

"களரியில் கருவுற்றேன்"

"KALAA POOSHANAM"
K.S. SIVADHANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADITAPATHAM ROAD

இப்பத்திரிக்கை இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையத்தால் காந்தள் புலம்பெயர் இளையோர் அனுசரணையில் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்து பிறின்டேர்ஸ்சில் 01.01.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது